# நாற்பெரும் புலவர்கள்.

டாக்டர்
இராசமாணிக்கனார்



பூரம் பதிப்பகம்

# நாற்பெரும் புலவர்கள்

டாக்டர். இராசமாணிக்கனார்

பூரம் பதிப்பகம்
59, ராஜு நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம் : : சென்னை-33

முதற் பதிப்பு : 1944
இரண்டாம் பதிப்பு : 1946
மூன்றாம் பதிப்பு : 1992
நான்காம் பதிப்பு : 1996

விலை : ரூ. 12-00

அச்சிட்டோர் :
கவிதா அச்சகம்,
24, பஜார் ரோடு,
மயிலாப்பூர், சென்னை—600 004

# ஆக்கியோன் உரை

*'நாற்பெரும் புலவர்கள்'* என்னும் இச்சிறு நூல், "*சீத்தலைச் சாத்தனார், கபிலர், பரணர், நக்கீரர்,* என்னும் பெரும்புலவர் நால்வரைப் பற்றிக் கூறுவது. இந்நால்வரும் "பெரும்புலவர்' என்பது சங்கநூற் பயிற்சி உடையவர் அனைவர்க்கும் ஒப்ப முடிந்த முடிபாகும். இப் பெரியார் தம் வரலாறுகளால் அக்கால அரசர், வள்ளல்கள், புலவர், தமிழ்மக்கள் முதலியோர் நாகரிகம், குணாதிசயங்கள் இன்ன பிறவும் இனிதின் அறியலாம். நூல்கள் வாயிலாக இவற்றை அறிந்தவர் மிகச் சிலரே ஆவர். ஆதலின், இளைஞர்கள் எளிதில் இவற்றை அறிய வேண்டும் என்னும் பேராவலே இதனை எழுதுமாறு என்னைத் தூண்டியது. இதைத் தமிழர் அனைவரும் வரவேற்பதே ஆதலின் தமிழறிஞரும் நன்னோக்கம் தமிழ்ப் புலவரும் இந் நூலினைப் பெரிதும் ஆதரிப்பர் என்னுந் துணிபுடையேன். இத்தகைய தமிழ் நூல்களை ஆதரிப்பது, தமிழரை ஆதரிப்பதாகும்; தமிழைப் போற்றுவதாகும்; தமிழ் நாட்டின்மீது பற்றுள்ளம் கொள்ளச் செய்வதுமாகும்.

இதனை நன்முறையில் பார்வையிட்டு உதவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் **பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கட்கு யான் எழுமையும் கடப்பாடுடையேன்; இந்நூலினைத் தந்நூலாகக் கொண்டு ஆதரிக்கும் அனைவர்க்கும் நன்றியறிதல் உடையேன்.

சேக்கிழார் அகம்,
சென்னை.

**மா. இராசமாணிக்கம்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சித்தலைச் சாத்தனார் | 5 |
| 2. | கபிலர் | 27 |
| 3. | பரணர் | 54 |
| 4. | நக்கீரர் | 72 |

# நாற்பெரும் புலவர்கள்

## 1. சீத்தலைச் சாத்தனார்

இருபுனலும் மலையினின்று வருபுனலும் ஆகிய முந்நீரையும் எந்நாளும் பெற்றிருப்பது நீர் நாடு எனப்படுஞ் சோணாடு. செந்நெல், கன்னல், மஞ்சள், இஞ்சி, வாழை, கமுகு, தென்னை முதலிய மருத வளங்களால் எந்நாட்டிலும் முன் நாட்டப் படுவது அந்நாடு. ஆறுகளும், பொய்கைகளும், சோலைகளும், நந்தவனங்களும் அதற்கு அணி கலங்கள் போல் விளங்குவன. பச்சைக் கம்பளம் போர்த்தாற் போல விளங்கும் பசும்புல் வெளி களும், பயிர் நிலங்களும் காண்போரது கண்ணை யும் மனத்தையும் குளிர்விப்பன. நாட்டின் வளத் திற்கும் விளைவுக்கும் ஏற்பவே செல்வர்களும் கல்விமான்களும் அங்கு மிகுதியாயிருப்பர்.

இத்தகைய சோழ நாட்டிலே **சீத்தலை** என்று பெயர் கூறப்படும் சிறந்த பதியொன்று உண்டு.

அப்பதியின் அகத்தும் புறத்தும் அமைந்துள்ள இயற்கைத் தோற்றங்கள் பாவலர்களின் உள்ளத்திற்கு நல்விருந்தாக இன்பத்தைப் பெருக்குவன. ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் அவ்வூரில் வாழ்ந்து வந்தாராவர்.

அப்பதியில் தாளாண்மையிற் சிறந்த வேளாண் மரபினரும், வணிக மரபினரும், பிற மரபினரும் பெருகி இருந்தனர். அவர்கள் யாவரும் வேறுபாடென்பதின்றி, ஒரு குல மக்களே போல் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். அப்பதியிலே இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வணிகர் குலத்திலே தமிழ்த் தாய் மகிழவும் புலவர் குழாம் புகழவும் ஒருவர் தோன்றினார். அவர் பெற்றோர்கள் அவருக்குச் **சாத்தன்** என்னும் தெய்வத்தின் பெயரை இட்டார்கள். ஆகவே, **சாத்தன்** என்பது அக்குமாரரின் இயற்பெயராகும். அவர், இளமையில் பைந்தமிழைப் பாங்குறக் கற்ற பாவலரிடம் தமிழ் மொழியை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார். அவர் பெரும் புலவராய்த் திகழ்ந்தமையின், 'ஆர்' விகுதியைத் தந்து **சாத்தனார்** என அறிஞர் அவரை அழைப்பாராயினர்.

அக்காலத்தில் பீடுமிக்க மாட மதுரையில் சங்கத்தில் அமர்ந்து புலவர் பெருமக்கள் பலர் அருந்தமிழை ஆராய்வாராயினர். சாத்தனார் அச்சங்கத்தில் தாமும் ஒரு புலவராக இருக்க வேண்டுமென்று விருப்பங் கொண்டவராய்,

மதுரை மாநகரை அடைந்தார் சங்கப் புலவர்கள் அவரது தமிழ் அறிவை ஆராய்ந்து, அவரைத் தங்கள் குழாத்திற் சேர்த்துக் கொண்டனர். அக் காலத்தில் சாத்தனார் என்ற பெயர் கொண்ட புலவர் பலர் இருந்தனர். நமது சாத்தனார், அவர்களினின்றும் வேறுபடத் தம் ஊர்ப்பெயரைத் தம் பெயரோடு சேர்த்துக் கொண்டனர். எனவே, **சீத்தலைச் சாத்தனார்** என்று நம் புலவர் வழங்கப் பெற்றார்.

தமிழாராயும் நேரம் போக எஞ்சிய காலத்தில் சாத்தனார் கூலவாணிகத் தொழிலை நடத்தலானார்; நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி முதலான கூல வகைகளை விற்று, இதனால் வரும் பொருளைப் பெற்றுக் காலங் கழித்து வந்தார். இதனால், அவர் **மதுரைக் கூல வாணிகன் சாத்தனார்** என்றும் வழங்கப்பட்டார். முற்காலத்துப் புலவர்கள் அறிவு வளர்ச்சியின் பொருட்டுக் கல்வி கற்றுச் சீவனோபாயமாக வேறு தொழில்களையும் மேற்கொண்டிருந்தனர் என்பதற்கும் இவரும், **அறுவை வாணிகன் இளவேட்டனார். மருத்துவன் தாமோதரனார்** முதலான சங்கப் புலவர்களும், சான்றாவர்.

## முத்தமிழ் வேந்தர்

சாத்தனார் மதுரையில் வாழுங்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தவன் பாண்டியன்

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்பவன். இவன், கற்றோர்பால் மிக்க மதிப்புடையவன்; கற்றலையே பெரும்பயனாக எண்ணியவன். இவன் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து பேரறிவினனாய் விளங்கினான், இவ்வரசன் செய்யுள் செய்தலில் வல்லவன். இவன் பாடிய செய்யுள் ஒன்று புறநானூற்றில் உள்ளது. அதனை ஆராயின், இவனது மனப்போக்கு நன்கு விளங்கும்.

"தம்மாசிரியற்கு ஓர் ஊறுபாடு உற்றவிடத்து, அது தீர்வதற்கு வந்து உதவியும் மிக்க பொருளைக் கொடுத்தும் வழிபாட்டு நிலைமை தவறாது கற்றல் ஒருவற்கு அழகியது; ஏனெனில், பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரு வயிற்றுள் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன் கற்பின் மேற்குலத்து ஒருவனும் இவன் கீழ்க்குலத்தானென்று பாராது கல்வியின் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவானாதலின், ஒரு குடியின்கட் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருக என்னாது அவருள் அறிவுடையோன் சென்ற நெறியே அரசனும் செல்லும்" என்ற கருத்தைக் கொண்ட கொழுவிய பாடலைப் பாடியுள்ளான். கல்விக்குப் பெருமை தரும் பண்புடைய இம்மன்னன் காலத்தில் தமிழ்ச் சங்கம் சிறந்தோங்கி வளர்ந்தது என்பதில் ஐயமென்னை?

நெடுஞ்செழியன் பாண்டிய நாட்டை ஆண்டு வருங்கால் சோணாட்டைச் சோழன் **கரிகாற் பெருவளத்தான்** என்பவன் அரசாண்டு வந்தான். அவன் சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன்; தம்முள் மாறுபட்டு வழக்குரைக்க வந்த முதியோர், தன்னை இளையனென்றிகழ்ந்தமை அறிந்து, தான் முதியனாய் வந்து அவர்கள் வழக்கைத் தீர்த்தவன். அவன் இளைஞனாயிருந்த போது அவனைக் கொல்லப் பலர் முயன்றனர் என்றும், அதனால் அவன் கருவூர் சென்று அங்கு வசித்து வந்தான் என்றும், அவ்வமயம் அரசாள்வதற்குரியோர் இன்மையால் நாட்டிற் குழப்பமேற்பட, அக்கால வழக்கப்படி அமைச்சர் பட்டத்து யானையை விடுத்து அரசனைத் தேடுமாறு செய்தனர் என்றும், அக்களிறு கருவூரை அடைந்து ஆங்கிருந்த கரிகாலனைத் தன் முதுகின் மீது எடுத்து வைத்துக் கொண்டுவந்து, அவனை அரசனாக்கிற்று என்றும் தெரிகிறது. அவன் அரசாளத் தொடங்கியபோது, அவனது நாட்டைக் கைப்பற்ற எண்ணிய சிலர் அவனுடன் பகைமை கொண்டு அவனைச் சிறைப்படுத்தினர்; அரசன் சிறையைக் கடந்து வெளியேறுவன் என நினைந்து சிறைச்சாலைக்கு தீமூட்டினர். எனினும், கரிகாலன் தீயினுக்கு அஞ்சாது வெளிப்போந்தனன். அப்போது தீயால் அவன் கால் கருகிவிட்டது. அதனால், அவன் கரிகாலன் (கரிந்த காலை உடையவன்) என வழங்கப்பட்டான்.

அவன் மிகுந்த சீற்றமும் வீரமும் வாய்ந்தவன்; கூற்றுவனை விட மிக்க வலிமையுடையவன்; இளம் பிராயத்திலிருந்தே பலரை வென்று வெற்றியை நிலை நாட்டியவன்; சேரனையும் பாண்டியனையும் **வெண்ணி** என்ற ஊரில் ஒருங்கே சிதற அடித்தவன்; மான் கூட்டத்திற் புலி பாய்ந்தாற் போன்று பகையரசர்கள் சேனையில் புகுந்து அல்லல் விளைத்தவன். இவ்வேந்தன் சோழ நாட்டிற்கருகே இருந்த நாடுகளைக் கைப்பற்றினதும் போரில் விருப்பங்கொண்டு வட திசையை நோக்கிச் சென்றான்; அங்ஙனம் செல்கையில் இமயமலை குறுக்கிட்டுத் தடுத்தமையின், 'என், விருப்பத்தை இம்மலை தடுத்தது' என்று கூறி, முனிவுடன் அதன்மேல் தனது புலிக்கொடியை நாட்டி மீண்டான்.

இங்ஙனம் வெற்றியோடு திரும்பிய கரிகாலன் இலங்கை மீது படை எடுத்துச் சென்று, கடும்போர் விளைத்து, அதனையும் தன தாட்சிக்கு உட்படுத்திக் கொண்டான். சோழர் பெருமான் கொடையிற் சிறந்த வள்ளல்; பட்டினப் பாலையால் தன்னைப் பாடிய உருத்திரங் கண்ணனார் என்ற புலவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தவன். சோணாட்டுக் குடிகள் அவன் காலத்தில் இன்பமே அன்றித் துன்பமென்பதனை அறிந்திலர்.

சோழ பாண்டியர் இங்ஙனம் இருக்கையில் சேர நாட்டைச் **சேரன்—செங்குட்டுவன்** என்பவன்,

அரசாண்டு வந்தனன். அவனுக்குத் தம்பியாவார் **இளங்கோவடிகள்** என்னுந் துறவியார். செங்குட்டுவன் மிக்க இளம் பிராயத்திலேயே அரியணை ஏறினான். பல அரிய போர்ச் செயல்களைச்செய்து வெற்றி பெற்றான்; இமயத்தினின்றும் சிலை கொணர்ந்து தாயின் வடிவம் செய்து வைத்தான். அப்போது, தன்னை எதிர்த்த ஆரிய மன்னர்களை எளிதில் வென்று மீண்டான்; நிலத்தானையும் கடற்றானையும் பெற்றிருந்தான். அவனது மனைவி,அறிவிலும் உருவிலும் ஆலோசனையிலும் சிறந்து விளங்கிய **இளங்கோ வேண்மாள்** என்பவள். அவள் அரசனோடு கொலுமண்டபத்தில் வீற்றிருந்து அவ்வப்போது தன் ஆலோசனையைக் கூறுவது வழக்கம். அக்காலத்திலே செங்குட்டுவன் தன் மனைவிக்கு அத்துணை உரிமை அளித்திருந்தான்.

இனி, இவ்வரசர்கள் வரலாற்றை இவ்வளவில் நிறுத்தி, சாத்தனார் எவ்வாறு இவர்களோடு சம்பந்தப்பட்டனர் என்பதை அறிவோம்.

## வீர பத்தினி வரலாறு

சாத்தனார் மதுரையம்பதியில் சங்கப் புலவராயிருந்த காலத்தில் தமிழ்நாடு மூன்றிற்கும் சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அந்நிகழ்ச்சியின் வரலாற்றைக் கூறி, அத்துடன் சாத்தனார் சம்பந்தப்பட்டதையும் கூறுவோம்.

காவிரிப் பூம்பட்டினத்தில் மாசாத்துவான், மாநாய்கன் என்ற வணிகப் பெருமக்கள் வாழ்ந்தனர். மாசாத்துவான் மகனான **கோவலனுக்கும்** மாநாய்கன் மகளான **கண்ணகிக்கும்** மணம் நடந்தது. கோவலனும் கண்ணகியும் தனித்து இல்லறம் நடத்தினார்கள். கண்ணகியின் நற்குண நற்செயல்களைக் கண்டு மகிழ்ந்த கோவலன் அவளை,

''மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே! என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே! என்கோ?
யாழிடைப் பிறவா இசையே! என்கோ?
தாழிருங் கூந்தல் தையால்! நின்னை''

என்று, பலவாறு புகழ்ந்து போற்றலானான்.

இங்ஙனம் இருக்கும் நாட்களில் கோவலன் மிக்க அழகுடையவளும், சோழன் கரிகாலனால் பரிசளிக்கப்பட்டவளும், ஆடல் பாடல்களில் தேர்ச்சியுற்றவளும் ஆன **மாதவி** என்னும் நாடகக் கணிகையை விரும்பித் தன்னிடமிருந்த பொருள்களை எல்லாம் இழந்தான்; சில காலம் அம்மாதவியோடு இன்புற்று இருந்தான். அதுசமயம் கணவன் பிரிவாற்றாது, கண்ணகி துன்புற்றிருந்தாள். அவ்வூரில் ஆண்டுதோறும் இந்திர விழா நடப்பது வழக்கமாயிருந்தது. அவ்வருடம் அவ்விழாவின

முடிவில் அந்நகரத்தார் கடலாடுதற்குச் சென்றார்கள்.

அவ்வாறே கோவலனும் மாதவியும் சென்றனர். சென்ற இருவரும் கடற்கரைச் சோலையில் ஓர் இடத்தில் அமர்ந்தனர். அப்பொழுது கோவலன் மாதவி வைத்திருந்த யாழை வாங்கிப் பலவகைப்பட்ட வரிப்பாட்டுகளைப் பாடினான். அப்பாடல்கள், கோவலன் வேறு மகளிர்பால் விருப்பமுடையவன் என்பதைக் காட்டின. அதனால், மாதவி அப்பாடல்கள், கோவலன் வேறு மகளிர்பால் மெய்யாகவே விருப்பங் கொண்டிலன். மாதவி, அந்த யாழை வாங்கி வரிப் பாடல்களைப் பாடினாள். அவை, அவள், வேறு ஆடவர்பால் நாட்டமுடையாள் என்பதை விளக்கின. ஆனால் மாதவி அத்தகைய இழிந்த எண்ணம் உடையவளல்லள்: கோவலன் பாடினதற்கு எதிராகத் தானும் பாட வேண்டுமென்ற எண்ணத்தாற்றான் அங்ஙனம் பாடினாள்.

கோவலன் அவள்மீது வெறுப்புற்று, அக்கணமே அவளை விட்டு நீங்கினான்; நீங்கித் தன் மனையாளை அடைந்தான். அவன் அப்போதே தன் குற்றத்தை உணர்ந்து எளிமை தோன்ற நின்றான். அவன் படும் துன்பத்தைக் கண்ட கண்ணகி, "என்னிடத்து இரண்டு சிலம்புகள் உள; அவற்றைக் கைக்கொண்டருள்க" என்றாள். கோவலன், "நான் மதுரைக்குச் சென்று, இச்

சிலம்பை விற்று, அப்பொருளை வாணிக முதலாகக் கொண்டு வியாபாரம் செய்ய விரும்பி உள்ளேன். நீயும் என்னுடன் வருக," என்றான். கண்ணகியும் அதறகிசைந்தாள்.

அன்றிரவின் கடையாமத்தில் இருவரும் புறப்பட்டு, காவிரியின் வடகரை வழியாக மேற்கே சென்று ஒரு பூஞ்சோலையை அடைந்தனர். அங்கு **கவுந்தி அடிகள்** என்ற சமண முதியாரைக் கண்டு, மதுரை செல்ல இசைந்த அவரையும் உடன் அழைத்துக்கொண்டு மூவரும் மதுரையை நோக்கிச் செல்வராயினர். வழியில் ஸ்ரீரங்கம் தென்பட்டது; மூலரும் அங்கு வந்த சாரணர்களைத் தரிசித்து, ஓடமேறிக் காவிரியின் தென்கரை சேர்ந்து, ஒரு பொழிவிலே தங்கினர். அவ்வமயம் கோவலனையும் கண்ணகியையும் ஒரு பரத்தையும், தூர்த்தன் ஒருவனும் அவமதித்துப் பேசினான். கவுந்தியடிகள் அவர்களை நரிகளாக்கி ஒரு வருடத்திற் சாபம் தீருவதாகவும் கூறினார். பின்னர் மூவரும் உறையூரை அடைந்தனர்.

மூவரும் அன்றிரவு உறையூரின்கண் தங்கியிருந்து மறுநாட்காலையில் புறப்பட்டனர். புறப்பட்டுச் செல்லுகையில் ஒரு நாள் கோவலன் தனியே நீர் கொண்டுவரச் சென்றான். அப்போது கௌசிகன் என்னும் அந்தணன் ஒருவன் மாதவியாக அனுப்பப்பட்டு அங்கு வந்தான். கோவலன், தன் பெற்றோரும் மாதவியும் தன் பிரிவாற்றாது

வருந்துவதை அவனால் அறிந்து மிக வருந்தினான். தான் செல்லும் வரலாற்றை அந்தணருக்குக் கூறி அவனை அனுப்பி மீண்டான். பின்னர்க் கோவலன் கண்ணகியையும் கவுந்தி அடிகளையும் அழைத்துக் கொண்டு சென்று வைகை யாற்றை அடைந்தான்; அதனைத் தொழுது புணையேறி அக்கரையை அடைந்து மதுரையின் மதிப்புறத்தாகிய முனிவர் ஆச்சிரமத்தே தங்கினான்.

மறுநாள் கோவலன் தனியே புறப்பட்டு மதுரைக்குள் சென்றான். அவன் அம்மாநகரத்தின் வளப்பத்தைக் கண்ணுற்று மீண்டான். அப்போது **மாதரி** என்ற இடைச்சியர் தலைவி ஆச்சிரமத்திற்கு வந்தாள். கவுந்தி அடிகள், கோவலனையும் கண்ணகியையும் மாதரியிடம் அடைக்கலமாக விட்டார் மாதரி, கணவனுக்கும் மனைவிக்கும் குறைவின்றி அன்னம் படைத்தாள். கோவலன் கண்ணகியின் சிலம்பொன்றை கையிலேந்தி அதனை விற்றற்பொருட்டு மதுரைக்குள் நுழைந்தான்; நுழைந்து, கடைவீதி வழியாய்ச் செல்லுகையில், பலர் பின்னே வரப் பொற்கொல்லன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். கோவலன் அவனிடம் தன் சிலம்பைக் காட்டினான்.

சிலம்பைக் கண்ணுற்ற பொற்கொல்லன், "ஐய, இச்சிலம்பு எம் அரசியே அணியத் தக்கது. யான் சென்று அரசனுக்குத் தெரிவித்து வருமளவும் நீ இங்கிரு" என்று கூறி, அரண்மனை நோக்கி நடந்தான். நடந்து சென்ற அவன் தனக்குள்ளே,

"யான் முன்பு வஞ்சித்துக் கவர்ந்து கொண்ட சிலம்பு என்னிடத்தே உள்ளதென்று அரசனுக்குத் தெரியா முன்னரே, அதனோடு ஒத்த சிலம்பைக் கொணர்ந்த இப்புதியவனால் என் மீதுள்ள ஐயத்தைப் போக்கிக் கொள்ளலாம்" என்று எண்ணிக் கொண்டான்.

பொற்கொல்லன், அரண்மனையை நெருங்கினான். அவ்வமயம் பாண்டியன் நெடுஞ்செழியன் வெகுவிரைவாக அந்தப்புரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். பொற்கொல்லன் அரசனைப் பணிந்து, "அரசரே! கன்னக்கோல் முதலியன இன்றி அரண்மனையில் இருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய வீட்டில் அச் சிலம்போடு வந்துள்ளான்" என்றான். பாண்டியன் உடனே காவலாளிகளை அழைத்து, "என் மனைவியின் சிலம்பு இவன் கூறிய கள்வன் கையில் உள்ளதாயின், அவனைக் **கொல்ல** அச் சிலம்போடு கொண்டு வருக" என்று சொல்ல வாயெடுத்தவன் வினை பலிக்குங் காலமாதலால் மயங்கி "அவனைக் **கொன்று** அச்சிலம்பைக் கொணர்க" என்றான்.

உடனே காவலாளிகள் பொற்கொல்லனோடு சென்று கோவலனைக் கண்டார்கள். மாசற்ற முகத்தோடிருந்த அவ்வணிகர் பெருமானைக் குற்றமற்றவனெனக் காவலாளிகள் எண்ணினர். அதனால், ஒருவரும் அவனைக் கொல்ல விரும்பவில்லை. அது கண்ட பொற்கொல்லன் காவலர்

மனம் வேறாகுமாறு களவு, நூலில் உள்ள பல ஏதுக்களை அவர்கட்குக் காட்டினன். அதன் மேல் கொலைக்கஞ்சான் ஒருவன் விரைந்து சென்று, கோவலனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி உணர்ந்தாள். அவள் அறிவு கலங்கி, அழுதரற்றி ஓடினாள்; "கதிர்ச் செல்வனே! நீ அறிய என் கணவன் கள்வனோ?" என்றாள். அவன், "அம்மே! நின் கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இவ்வூரை விரைவில் எரியுண்ணும்" என்றான். அப்பால், கண்ணகி மதுரையுள் நுழைந்து, வெட்டுண்டு கிடந்த கோவலனைச் சிலர் காட்டக்கண்டு, அவனுடலைப் போய்த் தழுவினாள். அவ்வளவில், கோவலன் உயிர் பெற்றெழுந்து, "மதி போன்ற முகம் வாடியதே!" என்று சொல்லிக் கையாலே அவள் கண்ணீரை மாற்றினன். கண்ணகி புலம்பியவளாய் அவனுடைய பாதங்களை இரு கைகளாலும் பூண்டு கொண்டு பணிந்தாள். உடனே அவன் "கண்ணகி, நீ இங்கிருக்க" என்று கூறி விட்டுச் சுவர்க்கம் புக்கான்.

பின்னர்க் கண்ணகி தலைவிரி கோலமாய்ப் பாண்டியன் முன்னர்ச் சென்று நின்றாள்; தன் வழக்கை உரைத்தாள்; தனது மற்றொரு சிலம்பை உடைத்து அதனுள் இருந்த மாணிக்கப் பரலைக் காண்பித்தாள். அரசபத்தினியின் சிலம்பினுள்

முத்துப்பரல் இருந்தது. அக்கணமே பாண்டியன் உண்மையை உணர்ந்தான்! தான் பொற்கொல்லனால் ஏமாற்றப்பட்டதை எண்ணி மயங்கிக் கீழே விழுந்தான்; உயிர் துறந்தான். அவன் மனைவி கோப்பெருந்தேவியும் ஆவி நீத்தாள்.

கண்ணகி, வீராவேசம் கொண்டவளாய் அரண்மனையை விட்டு நீங்கி, "நான் பத்தினியாயின் இவ்வூரை அழித்து விடுகிறேன் பார்" என்று சபதம் செய்து, தனது இடக் கொங்கையை வலக்கையால் திருகி எடுத்து நகரத்தின் மீது எறிந்தாள். உடனே அக்கினி தேவன் அவள் முன் தோன்றி, "அம்மே! யான் என்ன செய்ய வேண்டும்?" என்றான். கண்ணகி, "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி என்னுமிவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்றாள். அப்பொழுதே அந்நகரில் தீப் பற்றிக் கொண்டது. நகரைக் காக்கும் தெய்வங்கள் ஓடி விட்டன. மதுரையின் அதிதேவதை கண்ணகியை நோக்கி ஓடி வந்தது.

**வெள்ளி அம்பலம்**

மதுரை மாநகரில் வெள்ளியம்பலம் என்றோர் அம்பலம் உண்டு. அதனில், துறவிகள் முதலாயினோர் தங்கி இருப்பர். அவ்வம்பலத்தில் நமது சீத்தலைச் சாத்தனார், கண்ணகி மதுரையைத் தீக்கொளுத்திய சமயத்தில் தங்கியிருந்தார். மதுரைமா தெய்வம் கண்ணகியை நோக்கி வந்த

போது கண்ணகி வெள்ளியம்பலத்தின் அருகே நின்று கொண்டிருந்தாள். எனவே, கண்ணகியிடம் மதுரைமா தெய்வம் சென்று பேசியவற்றைச் சாத்தனார் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

மதுரைமா தெய்வம் கண்ணகியை நோக்கி, அம்மா! உனக்கு ஒன்று சொல்ல வந்தேன். இப்பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றமுடையவன் அல்லன். நீ, முற்பிறப்பில் சிங்கபுரத்துக் கடைவீதியில் இருந்த பரதன் என்பவனின் மனைவியாயிருந்தனை. பரதன் இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்தான். அவன் சங்கமன் என்பான் மீது பொறாமை கொண்டு, அவன் பகையரசனின் ஒற்றன் எனத் தன் அரசனிடங் கூறி, அவனைக் கொல்வித்தான். அச் சங்கமனே இப்பிறப்பில் பொற்கொல்லனாகப் பிறந்தான். சங்கமன் மனைவி, கணவன் பிரிவாற்றாது பதிநான்கு நாள் வருந்தி, பின்னர்த் தன் உயிரை விடத் துணிந்தவள் ஒரு மலைமீதேறி, 'எமக்குத் துன்பம் செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவாராக' எனச் சாபமிட்டிருந்தாள். அச்சாபமே உங்களைத் தொடர்ந்து வருத்தியது. நீ, இன்றைக்குப் பதிநான்காவது தினத்தின் பகல் சென்ற பின்பு உனது கணவனைக் கண்டு சேர்வாய்" என்று கூறி மறைந்தது.

தெய்வம் சென்ற பின்னர், கண்ணகி மதுரையினின்றும் நீங்கி, வையைக் கரை வழியே சென்

றனள்; சென்று சேர நாட்டை அடைந்தாள்; சேர நாட்டில் திருச்செங்குன்றம் என்ற மலைமீதேறி ஒரு வேங்கை மர நிழலில் நின்றாள். அப்போது அங்கு வானுலகினின்றும் விமானம் ஒன்று இறங்கியது. அதில் கோவலன் வீற்றிருந்தான். கண்ணகி விமானத்திலேறிக் கணவனோடமர்ந்தாள். விமானம் விண்ணுலகடைந்தது.

**சிலப்பதிகாரமும் மணிமேகலையும்**

வெள்ளி அம்பலத்திலிருந்து கண்ணகி வரலாற்றைக் கேட்டுணர்ந்த சாத்தனார் மீண்டும் கண்ணகியின் செயலை ஆராய விருப்பங் கொண்டனரோ அன்றி, சேரமன்னனான **செங்குட்டுவனைக்** காண விழைவு கொண்டனரோ, யாதோ, அறியோம். அவர் கண்ணகி சென்ற சேர நாட்டை அடைந்தார்; சேரன் செங்குட்டுவனைக் கண்டார். சேரர் பெருமான் புலவர் பெருமானை நன்கறிவானாதலின், அவரை வரவேற்று, அளவளாவிக் கொண்டிருந்தான். சாத்தனார் அவனோடு சில நாட்கள் தங்கியிருந்தனர். நிற்க.

வீர பத்தினியான கண்ணகி வேங்கைமர நிழலினின்றும் விண்ணுலகெய்திய அற்புதக் காட்சியை ஆண்டிருந்த குன்றக் குறவர்கள் கண்டு ஆச்சரிய முற்றனர். அவர்கள் கண்ணகியைத் தம் குலதெய்வமாகக் கொண்டாடினார்கள். தாங்கள் கண்ட காட்சியைச் சேரனுக்கு அறிவிக்க

விரும்பினார்கள்; அரசனைக் காண கையுறைப் பொருள்களுடன் புறப்பட்டார்கள்.

அவ்வேளையில் சேரமன்னன் வஞ்சிமா நகரினின்றும் புறப்பட்டு மலைவளத்தினைக் காண விரும்பி, பெரியாற்றங்கரையின் மணலில் இனிதமர்ந்திருந்தான். அவனுடன் அவனது மனைவி **இளங்கோ வேண்மாள்**, சீத்தலைச் சாத்தனார், இளங்கோவடிகள் முதலானோரும் இருந்தார்கள். அப்போது குன்றக்குறவர்கள் தாங்கள் கொணர்ந்த யானைக்கோடும், அகிற் கட்டையும் மான் மயிர்க் கவிரியும், சந்தனக் கட்டையும், சித்துரக் கட்டியும், பழ வகைகளும் தந்து அரசனைக் கண்டு பணிந்து,

"ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்நகில் இழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானகம் போற்ற வானகம் பெற்றனள்;
எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்னாட் டியாங்கள் நினைப்பினு மறியேம்"

என்றனர்.

குறவர் கூற்றைக் கேட்ட சேரன் வியப்புற்று ஒன்றுந் தோன்றாது திகைத்தான். அவ்வமயம் அருகே இருந்த தண்டமிழ்ச் சாத்தனார் அவனை நோக்கி, "அரசே, முன்பு நிகழ்ந்தவற்றை யான் அறிகுவன்" என்றுரைத்துக் கண்ணகி வரலாற்றை விரிவாகக் கூறினார்.

வீர பத்தினியின் வரலாற்றையும் பாண்டியனுக்கு நேர்ந்த தீவினைத் திறங்களையுங் கேட்ட சேரர் பெருமான் வருத்தங்கொண்டவனாய்ச் சாத்தனாரை நோக்கி "புலவீர், பாண்டிய மன்னன் செங்கோலினின்றும் வழுவினான். அதனால், அவன் கோல் வளைந்தது. ஆயின் தான் செய்தது பிழை என்பதை உணர்ந்த அக்கணமே அவன் உயிர் நீத்தான். அதனால், அவனது வளைந்த கோல் நிமிர்ந்தது. அரசர்களாயிருப்பார்க்கு நாட்டில் மழை பெய்ய வேண்டும் காலத்திற் பெய்யாது பொய்த்துப் போயின் துன்பமுண்டாகும். உயிர்கள் பிழை செய்யுமாயின் துன்பமுண்டாகும். கொடுங்கோலுக்கு அஞ்சி அரசராயிருந்தற்குரிய உயர் குலத்திற் பிறத்தலில் துன்பமே அன்றி இன்பம் ஒன்றுமில்லை" என்று கூறினன். பின்னர்ச் சேரன், தன் மனைவியோடு கூடி ஆலோசித்து, தன்னாடு நோக்கி வந்த பத்தினிக்கு ஆலயம் எடுத்து விழா இயற்றல் வேண்டும் என்று நிச்சயித்தான்; தான் நிச்சயித்தபடியே இமயமலையினின்றும் சிலையைக் கொணர்ந்து அதில் பத்தினியின் உருவத்தைப் பொறித்து, அதனை ஓர் ஆலயத்தில் வைத்து விழா இயற்றினன். பத்தினிக் கடவுளும் சேரனுக்குக் காட்சி தந்து மறைந்தது.

சாத்தனார் கூறிய பத்தினியின் வரலாற்றையும், அவளுக்குச் சேரன் செய்த சிறப்பையும் சேர்த்து ஒரு நூலாக்க வேண்டும் என்று சாத்தனார் செங்குட்டுவனின் இளவலான இளங்கோ

வடிகளை வேண்டிக்கொண்டார். அவரும் அதற்கு உடன்பட்டார்; கண்ணகி வரலாறு, தமிழ் வேந்தர் மூவர்க்கும் உரியதாதலால், அவள் வரலாற்றை மூன்று கூறாகப் பிரித்தார்; ஒவ்வொரு பிரிவில் உள்ள செய்தியும் அவ்வந்நாட்டுத் தலை நகரில் நடந்தமையின் அவ்வப்பெயரை இட்டார்; எனவே, புகாரில் நடந்த வரலாற்றைப் **புகார்க் காண்டம்** என்னும் பகுதியிலும் மதுரை நகரில் நடந்த செய்தியை **மதுரைக் காண்டம்** என்னும் பகுதியிலும், சேர நாட்டில் நடந்த நிகழ்ச்சியை **வஞ்சிக் காண்டம்** என்னும் பகுதியிலும் பாடி முடித்தார்.

சிலம்பு காரணமாக விளைந்த வரலாறு ஆதலின், இளங்கோவடிகள் தாமியற்றிய நூலுக்குச் **சிலப்பதிகாரம்** எனப் பெயரிட்டார். அவர் இந்நூல் செய்வதற்கு முக்கிய காரணராக இருந்தவர் நம் புலவர் பெருமான் சாத்தனாரே ஆவர்.

மாதவி என்னும் நாடகக் கணிகைக்கும் கோவலனுக்கும் **மணிமேகலை** என்றொரு பெண் பிறந்தாள். கோவலன் கொல்லப்பட்ட செய்தியை உணர்ந்த மாதவி, கணிகைத் தொழிலை அறவே விட்டுப் பிக்ஷுணி ஆயினள். அவள் மகள் மணிமேகலையும் புத்த மதத்திற் சேர்ந்தாள்; அறவண அடிகள் என்ற பௌத்த முனிவரிடம் அறவுரைகளைக் கேட்டாள்; அட்சயபாத்திரம்

ஒன்றைப் பெற்று அதன் உதவியால் பல ஏழை மக்களைக் காப்பாற்றி வந்தாள்; பல புத்த முனிவர் களைத் தரிசித்து இறுதியில் நற்பேற்றைப் பெற்றாள். அம்மணிமேகலையின் சிறந்த வரலாற்றை முப்பது கதைகளாகப் பிரித்து, ஆசிரியர்-சீத்தலைச் சாத்தனார் ஒரு நூலியற்றி னார்; அந்நூலுக்குக் கதாநாயகியான மணிமேகலையினது நற்பெயரையே இட்டனர். எனவே, கோவலன், கண்ணகி என்போரது வரலாற்றைக் கூறுவது **சிலப்பதிகாரம்** என்னும் நூலாகும். மாதவி மகள் மணிமேகலை வர லாற்றை விரிப்பது **மணிமேகலை** என்னும் நூலா கும். முன்னது இளங்கோவடிகளாலும் பின்னது சாத்தனாராலும் பாடப்பட்டன.

இவற்றுள் சிலப்பதிகாரம் **அறம், பொருள், இன்பம்** என்ற மூன்றையும் தழுவி நிற்கும் நுண்ணிய நூலாகும். மணிமேகலை என்பது வீடு பேற்றைத் தழுவி நிற்பதாகும். இவ்விரண்டும் தொடர்புடைய நூல்கள்; முன்னது தாய் தந்தை யரைப் பற்றியதும், பிற்பட்டது மகளைப் பற்றிய தும் ஆதலின், இவ்விரண்டு நூல்களும் ஐம்பெருங் காப்பியங்களில் சிறப்புப் பெற்ற இரண்டாம். இவை சங்க காலத்தில் இயற்றப்பட்டமையின், சங்க நூல் வரிசையில் வைக்கற்பாலன. இவற்றை ஒவ்வொரு தமிழரும் வாசித்தல் இன்றியமையாது தாம்.

**சாத்தனாரும் நன்மாறனும்**

நெடுஞ்செழியனுக்குப் பின்னர்ப் பாண்டி நாட்டை **நன்மாறன்** என்பவன் ஆண்டு வந்தான். அவன் 'சித்திர மாடம்' என்ற மாளிகையில் இறந்தமையின், 'சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்' என வழங்கப்பட்டான். அவ்வேந்தன், தன்னைச் சேர்ந்தோர்க்கு மிக்க நன்மையும் பகைவர்க்கு மிக்க துன்பமும் புரிந்தவன்; சிறந்த குணங்களை அணிகலனாகக் கொண்டவன்; புலவர் பெருமக்களிடத்து நீங்காத அன்புடையவன். அவன் எவர் எதை விரும்பி வரினும், 'பெறுக' என்று சொல்லி, வரையாது கொடுக்கும் வள்ளற்றன்மை வாய்ந்து விளங்கினன்.

ஒருகால், நம் புலவர்—சாத்தனார் அப்பாண்டியர் பெருமகனிடம் சென்றிருந்தார். அதுபோது, அவன் அவரை உபசரித்து, நல்விருந்தளித்து, நகைமுகங்காட்டி, அவர் மனம் வெறுக்குமாறு பரிசில் பல நல்கினான். புலவர் பெருமகிழ்வு கொண்டவராய் அவன் அருமை பெருமைகளைப் புகழ்ந்து, "ஆரந்தாழ்ந்த அழகு மிக்க மார்பினையும் முழந்தாளிலே தோய்ந்த பெரிய கையினையும் உடைய அழகுமிக்க வழுதி! நீ யாவர்க்கும் உவந்து அருளைப் பண்ணுவை. பெரும! நீ, நின் பகைவர்க்கு எந்நாளும் சுடும் வெம்மை ஒழியாது கடலிடத்தே கிளர்ந்தெழுகின்ற ஞாயிற்றை ஒப்பை; எம்போல்வார்க்குத் திங்களை ஒப்பை'

என்ற பொருளை வைத்து, விழுமிய பாடல் ஒன்றைப் பாடினர்.

### சாத்தனார் பாக்களின் பெருமை

மணிமேகலைக் காப்பியம் அன்றி, சாத்தனார் பாடியனவாக சங்க நூல்களில் சில பாடல்கள் கிடைத்துள்ளன.

இப்பெரியார் பாடல்கள் பேரழகு வாய்ந்தவை; இயற்கை வருணனைகள் அமையப் பெற்றவை; பௌத்த மதக் கொள்கைகள் நிறையப் பெற்றவை. எல்லா மதக் கொள்கைகளும் கடவுளரும் இவர் பாடல்களில் காணலாம். இவர் பாக்கள் கணக்கற்ற நீதிகள் நிரம்பியவை; மனத்தைத் தம் வசம் இழுப்பவை. நீங்கள் இப்பெரியார் பாடல்களைப் பன்முறையும் படித்துச் சுவைத்தல் வேண்டும். இவருடைய பாக்களாகிய மலர்களில் தமிழ்த்தேன் நிறைந்துள்ளது.

# கபிலர்

## இளமையும் கல்விப் பயிற்சியும்

பொய்யாது அளிக்கும் வையைப் பாயப்பெற்ற வளம் பொருந்திய பாண்டிமா நாட்டில் **திருவாத வூர்** என்னும் உயரிய பதியொன்றுண்டு. அப்பதியில் நெல்வளம் பெற்ற காராளர் எனப்படும் வேளாளரும் தோலாநாவின் மேலோராய நான்மறை அந்தணரும் மல்கியுளர். அவ்வூரில் சிறந்த சிவாலய மொன்று இருக்கின்றது. அங்கு வாழ்ந்த குடிகள் நாற்றமிழை நன்கு அறிந்தவர்கள்.

பெருமையுற்ற அவ்வாதவூரில் கடைச்சங்க காலத்தில் **கபிலர்** என்ற ஒருவர் அந்தணர் மரபில் தோன்றினார். அவர் இளமையில் ஒரு நல்லா சிரியரை அடைந்து, அவர் காலத்து விளக்க முற்றிருந்த தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். அங்ஙனம் கல்வி கற்ற புலவர் தமிழில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனப் பேராற்றல் வாய்ந்து விளங்கினார்.

பீடுமிக்க மாடமதுரையில் சங்கமொன்றை நிறுவித் தமிழறிஞர் பலர் குழுமித் தமிழ்ஆராய்வதைப் புலவர் உணர்ந்தார்; தம் பதியை விட்டுப் புறப்பட்டு மதுரை மாநகரை அடைந்தார்; அடைந்து, தம் ஆற்றலை மதுரைச் சங்கப் புலவர்கட்குக் காட்டினர்; அவர்கள் கபிலரது தமிழாற்றலை உணர்ந்து, அவரைத்தம் கூட்டத்திற் சேர்த்துச் கொண்டனர். எனவே, கபிலர் பெருமான் கடைக் சங்கப் புலவராக விளங்கினர். அவர் காலத்தில் அவரைப் போல் மிக்க மேம்பாடும் பேராற்றலும் வாய்ந்தவர் பரணர், சீத்தலைச் சாத்தனார், நக்கீரர் என்ற பெருமக்களே ஆவார்.

இப் புலவர்களோடு கபிலர் தமிழாராய்ந்து, அம்மொழியினைப் பெருக்கிக் கொண்டு அரசர்களை அன்புறப் பாடிக்கொண்டும் காலங் கழித்து வந்தார்.

**கபிலரும் சேரனும்**

கடைச்சங்க நாளில் சேரநாட்டின் ஒரு பகுதியைச் **செல்வக் கடுங்கோ வாழியாதன்** என்பவன் ஆண்டு வந்தான். இவன் சிறந்த வீரன்; தமிழ் மொழியில் அதிகப் பற்றுள்ளவன்; புலவர்களைப் பெரிதும் ஆதரிப்பவன். இவனது இல்லம் புலவர்கட்கு தாய் வீடு போன்றது; யார் எதை விரும்பி வரினும் அவர் விரும்பியவற்றை ஈத்துவக்கும் செல்வன். அதனால் இவன் பெருமை தமிழ் நாடெங்கும் பரவியது.

சீருற்ற சேரலாதனைக் காணவேண்டுமெனப் புலவர் விரும்பினார்; விரும்பிய வண்ணம் மதுரையினின்றும் நீங்கிச் சேர நாட்டையடைந்தார்; அரசனைக் கண்டார். புலவர் பெருமையினை முன்னரே கேள்வியுற்றிருந்த சேரமான் அவரை நேரிற் கண்டதும், அகமலர முகமலர்ந்தான்; அவரைப் பற்பல கூறி உபசரித்தான்; நல் விருந்து செய்தான்; அவர் மனம் மகிழுமாறு பரிசில் நல்கினான். புலவர் பெருமகிழ்ச்சியுற்று, அவனது அரிய குணத்தை வியந்து கொண்டாடினர்.

பின்னர் புலவர் சூரிய மண்டலத்தை நோக்கி அதனை முன்னிலைப்படுத்திச் சேரமானது பெருமையைக் கூறி வியந்தார். "மிக்க செலவை யுடைய மண்டலமே! நீ பகற் பொழுதை நினக் கெனக் கூறுபடுப்பை! திங்கள் மண்டலத்திற்கு முதுகிட்டுப் போவை; தெற்கும் வடக்கும் ஆகிய இடங்களில் மாறி மாறி வருவை; மலையின் கண்ணே வெளிப்படாது கரப்பை; பல கிரணங் களையும் பரப்பி அகன்ற பெரிய ஆகாயத்தின் கண்ணும் பகற் பொழுதை விளக்குவை. எம் மரசன் சேரமான் உலகத்தைக் காக்கும் அரசர் பலரால் வழிபாடு சொல்லப்படுவன்; நுகரும் இன்பத்தை விரும்பிப் 'பூமி பிற வேந்தருக்கும் பொது' என்னும் வார்த்தைக்குப் பொறாதவன். வழங்கும் வண்மையுடையான்; வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படையையுடையான். இத் தகைப் பெருமையினையுடைய அரசனை நீ

எங்ஙனம் ஒப்பை?" என்ற கருத்தைக் கொண்ட செந்தமிழ்ப் பா ஒன்றினைப் பாடியுள்ளார்.

ஒருகால் சேரமான் கபிலர் கையைப் பற்றி, "கவியரசே! நும் கை மெல்லியதாயிருக்கக் காரணம் என்ன?" என்று வினவினான். கபிலர் அரசனைப் புன்முறுவலோடு நோக்கி, "புவியரசே! நீ, வன்கண்மையையுடைய கொலையானையாலே காவலைக் கொண்ட கணைய மரத்தை முறிப்பை; இரும்பாற் செய்யப்பட்ட அழகு செய்த அங்குசத் தால் முன்னர்க் கடாவி, அது செய்ய வேண்டிய வேலையைப் பின் வேண்டுமளவிலே பிடிப்பை; வலிய நிலத்தைக் குந்தாலியால் இடித்துச் செய்த குழிந்த கிடங்கின் கண் நீர் அதிகமாயிருத்தலை அறிந்து, அதன்கட் செல்லாது மிக்க செலவினை யுடைய குதிரையைக் குசைதாங்கி வேண்டு மளவிலே பிடிப்பை; அம்பறாத் தூணி பொருந்திய முதுகை உடையையாய்த் தேர்மீது நின்று வில்லி னது வலிய நாணாற் பிறந்த வடுப் பொருந்தும் படி அம்பைச் செலுத்துவை; பரிசிலர்க்குப் பெறு தற்கரிய அணிகலங்களை அளிப்பை; இக்காரியங் கட்கு, நின் முழந்தாளைப் பொருந்திய பெரிய கைகள் வலிவுற்றிருக்க வேண்டும்; அவை அங்ஙனமே வலி பெற்றிருக்கின்றன. பரந்த மார்பினையும் நிலம் போன்ற வலியினையும் உடைய அரசே! நினைப்பாடுவாருடைய கைகள், ஊனையும் துவையலையும் கறியையும் சோற்றை யும் உண்ண உதவுகின்றனவேயன்றி வேறு,

செயலறியா ஆதலின், அவை மெல்லிய ஆயின பெரும!" என்று விடை பகர்ந்தார்; இவ்விடையால் சேரமான், பகைவர் நாட்டை அழிக்கும் விதத்தையும் அவன் கைவண்மையையும் நன்கெடுத்துக் கூறினார்.

சேரமான், புலவர் கூற்றைக் கேட்டு உள்ளம் பூரித்தான்; தன் அரண்மனையில் பல நாள் புலவரை வைத்தாதரித்தான். பின்னர்ப் புலவர் அவனிடம் வேண்டும் பரிசிலைப் பெற்று மதுரையம்பதியை அடைந்தார்.

**வேள்—பாரி**

அக்காலத்தில் கடையெழு வள்ளல்களில் **வேள் பாரி** என்று ஒருவன் இருந்தனன். இவன் நற்குண நற்செயல்கள் வாய்ந்தவன்; குடிகளை அன்போடும் அருளோடும் காத்து வந்தனன்; இரப்போரைக் காணச் சகியான். இவனைப் பாடாத புலவர் இல்லை; சுந்தர மூர்த்தியாரும் தமது தேவாரத்தில் "கொடுக்கிலாதானைப் **பாரியே** என்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று கூறியுள்ளார். கொடையிற் சிறந்து விளங்கிய வள்ளல்கள் பலர் அக்காலத்தில் இருந்தும், அப்பெரியார் பாரியை உதாரணமாகக் காட்டினமையால் இவன் அக்காலத்து ஏனை வள்ளல்களிலும் மேம்பட்டவன் என்பது வெள்ளிடை மலை.

"புலங்கந் தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றோடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி." —அகநானூறு

என்று நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியரான ஒளவையாரால் புகழ்ந்து பாடப் பெற்றவன் இப் பாரி. இவன், வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் ஆரமும் தேரும் வாளும் உடைய குறுநில மன்னவன்; பாண்டிய நாட்டிலுள்ள பறம்பு மலைக்குத் தலைவன், இவன் நாட்டையும் பொருளையும் படையையும் அதிகம் பெற்றிலனாயினும் இவனது வள்ளன்மை மூவேந்தர் வள்ளன்மையினும் சிறந்து விளங்கியது.

இவன் ஒருநாள் தனது பொற்றேர் ஊர்ந்து வேட்டைக்குப் புறப்பட்டான்; பல விலங்குகளை வேட்டையாடினன்; பின்னர், அரண்மனையை நோக்கித் திரும்பினன். அவ்வாறு இவன் வந்த போழ்து, தன் நாட்டு வளத்தைக் கண்டு மகிழ்பவன் போல இரு புறங்களிலும் ஊன்றிய பார்வையோடிருந்தான்; அங்ஙனம் பார்த்துக் கொண்டு வருகையில் முல்லைக் கொடி ஒன்று படர்தற்கேற்ற கொழு கொம்பில்லாது வாடுவதைக் கண்டான்; உடனே வள்ளல் அம்முல்லையருகில் தன் தேரை நிறுத்தினான்; கீழிறங்கினான்; முல்லை படுந்துன்பத்தைக் கண்டான்; அவனது மனம் மயக்கங் கொண்டது; கண்களில் நீர்த்துளிகள் துளித்தன. பிறர் துயரம் காணச் சகியா இவ்வள்ளல் "அந்தோ! இக்கொடி படர்தற்கேற்ற

கொம்பின்றி வாடுகின்றதே, யான் என்ன செய்வேன்! இங்குக் கொம்பொன்றும் இல்லையே. இதன் துன்பத்தைக் கண்டும் இதற்கொன்றும் செய்யாது யான் வறிதே எங்ஙனம் செல்வென்? ஆ! நன்று, எனது பொற்றேரை இம்முல்லைக் கொடிக்கு ஆதரவாக வைத்து விட்டுச் செல்வேன்; இஃதே சரி" என்று கூறிக் கொண்டனன். உடனே இவன் தன் பொற்றேரை, சிறிதும் முன்பின் யோசியாது, காற்றால் அலைப்புண்ட முல்லைக் கொடிக்கருகில் வைத்தான்! ஆடிக் கொண்டிருந்த கொடி இனிதாய்ப் படருமாறு தன் தேர்மீது அதனை எடுத்து விடுத்தான்.

தேரை முல்லைக் கொடிக்கு நல்கியதால் அவன் அங்கிருந்து புறப்பட்டு, வெயிலால் மண்டை வெடிக்கவும், கால்கள் கொப்பளிக்கவும் நடந்து சென்று தன் அரண்மனையை அடைந்தான். பாரி செய்த இவ்வரிய செயல் பல புலவர் பெருமக்களால் பாராட்டப்படுகின்றது. இத்தகைச் சிறந்த ஈகைக் குணமுடையவன் வேள்பாரி.

### கபிலரும் பாரியும்

பாரியின் பரந்த புகழைக் கபிலர் பெருமான் கேள்வியுற்றார்; அவனைக் காண விரும்பிப் பறம்பு நாட்டை அடைந்தார்; பாரியைக் கண்டார். பாரி புலவரை வரவேற்று உபசரித்தான். அன்று முதல் கபிலர் பாரியின் குணாதியங்களைக் கண்டு ஆனந்தமுற்று அவனைத் தன் உயிர்த்

தோழராகக் கொண்டனர். பாரியும் கபிலரைத் தன் அவைப் புலவராகக் கொண்டனன்; தன் அருமைப் பெண்களான அங்கவை, சங்கவை என்பவர்களைக் கபிலரைக் கொண்டு கல்வி கற்கச் செய்தான். செம்மொழிப் புலமை வாய்ந்த கபிலர் அம் மகளிரைப் பெரும் புலவர்களாகச் செய்து விட்டனர்.

பாரியின் நற்குண நற்செயல்கள் கபிலரைக் களிப்புறச் செய்தன. அவர் அவ்வப்போது அவனைப் புகழ்ந்து பாடுவதுண்டு.

அவர் ஒருகால் பாரியினது வள்ளன்மையைப் புகழ்பவராய், "நல்லனவென்றும் தீயனவென்றும் கூறப்படுவன சூடும் மலர்கள்; அவை இரண்டினும் வேறான எருக்கம் பூவாயினும் ஒருவனுடையனவற்றைத் தெய்வங்கள் விரும்பேமென்னா. அதுபோல, அறிவற்றவரும் அற்பகுணமுடையாரும் சென்றாலும் பாரி, அவர்கட்கு பொருள் ஈதலில் தவறான்" என்றும், "இவ்வுலகத்தைக் காப்பதற்கு மாரியுண்டு அங்ஙனம் இருக்க, செவ்விய புலமை வாய்ந்த அறிவுடையோர் 'பாரி, பாரி' என்று சொல்லி அவனது பல புகழை வாழ்த்தி, அவ்வொருவனையே புகழ்கின்றனரே!" என்று தமக்குள் கூறிப் பாரியைப் பாராட்டினார். மேலும் அவர், "பறம்பு நாட்டில் மிக்குள்ள மரங்கள் சந்தன மரங்கள். அவற்றைக் குறத்தியர் எரிக்கின்றனர். அதனால் உண்டாகும் புகை அருகேயுள்ள வேங்கை மரத்திற்

படியும். இத்தகைய வளம் பொருந்திய பறம்பு நாட்டைப் பாரி, பாடுவார்க்குப் பரிசிலாக் கொடுத்து விட்டனன். இவனது பரந்த சிந்தையை யும் விரிந்த நோக்கத்தையும் என்னென்பது!" என்றும் தமக்குள் கூறி வியந்தார்.

பின்னர் ஒருநாள் கபிலர் விறலி ஒருத்தியைச் சந்தித்தார். அவள் விரைவாகச் சென்றுகொண்டி ருந்தாள். கபிலர் அவளை நோக்கி, 'ஒளி தங்கிய நுதலையுடைய விறலி! உயர்ந்த பறம்பு மலையி னது காவலனும், அவனது மலையினது சிகரந் தோறும் இழிதரும் நீரினும் மிக்க இனிய மேன்மை யுடையவனுமான பாரி பக்கலிலே நீ பாடிச் செல்வாய்; அவ்வாறு செல்வாயாயின், எம்மன்னர் பெருமானிடமிருந்து சிவந்த அணியைப் பெறு குவை" என்ற கருத்தைக் கொண்ட பைந்தமிழ்ப் பாவொன்றினைப் பாடி மகிழ்ந்தார்.

**கபிலரும் காரியும்**

கபிலர் காலத்தில் சோழ நாட்டிற்கு வடக்கே திருக்கோவலூர் என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு காரி என்னும் சிற்றரசன் ஆண்டு வந்தான். இவன் தமிழ்நாட்டரசர் மூவர்க்கும் ஒவ்வொரு சமயத்து யுத்தத்திலும் உதவி புரிந்த வன்; புலவர்களைப் பாதுகாத்தவன்; அந்தணர்க்கு நிலங்களை விட்டவன்; கடையெழு வள்ளல்களில் ஒருவன். இவன் சிறந்த படையுடையவன்.

இவனது பெரும் புகழ் தமிழ்நாடெங்கும் பரவியது. நமது புலவர் பெருமானாகிய கபிலர் இவனைக் காண ஆவலுற்றார்; திருக்கோவலூரை அடைந்தார். காரியும் கபிலரை வரவேற்று, அவர் மனங்களிக்கப் பரிசில் நல்கினான். புலவர், உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகை கடல்போல் பொங்க, அவனைப் பற்பலவாறு புகழ்ந்து மகிழ்ந்தார்.

அவர் அவனை நோக்கி, "பெரிய வண்மையையுடைய தலைவ! ஒரு திசைக்கண் வள்ளியோனாகிய ஒருவனை நினைந்து நான்கு திசையினுமுள்ள பரிசின் மாக்கள் பலரும் வருவர்; அவர் வரிசையறிதல் அரிது; கொடுத்தல் மிக எளிது; நீ அவ்வரிசை அறிதலை நன்றாக அறிந்தாயாதலின், அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒருபடியாகப் பார்த்தலைத் தவிர்வாயாக. வீரக்கழல் அணிந்த இலக்கணத்தால் திருந்திய நல்ல அடியையுடைய காரி! நினது நாடு கடலாற் கொள்ளப்படாது; அதனைக் கொள்ளுதற்குப் பகைவரும் மேற்கொள்ளார்.

அது, வேள்வித் தீயைப் பாதுகாக்கும் பார்ப்பாருடையது. கெடாத செல்வத்தினையும் வென்றி பொருந்திய படையையும் உடைய மூவேந்தருள் ஒருவனுக்குத் துணையாக வேண்டுமென்று, அம்மூவர்பால் நின்றும் வந்தோர் தனித்தனி நினக்குத் தந்த பொருள், உனது அடியை வாழ்த்தினராய் வரும் பரிசிலருடையது.

ஆதலால் வடதிசைக்கண் தோன்றும் அருந்ததியை ஒக்கும் கற்பனையும் மெல்லிய மொழியினையும் உடைய அரிவையைத் தவிர நின்னுடையதென்று சொல்ல ஒரு பொருளையும் நீ பெற்றிலை; எனினும் நீ, செருக்குடன் இருக்கின்றாய்; இதற்குக் காரணம் என்னை?'' என்று அவனது ஒப்பற்ற ஈகைத் தன்மையை வியந்து பாடினார்.

பிறகு புலவர் தமக்குள், "கெடாத நல்ல புகழ் விளங்கும் மலையன், மது நுகர்ந்து மகிழாது, பிறர்க்கு வழங்கிய பொற்படைகளால் அணியப்பட்ட உயர்ந்த தேர்கள், பயன் பொருந்திய முள்ளூர் மலையுச்சியின்கண் உண்டாகிய மழையினது துளியினும் பலவாகும். எனவே, அவன் பிறர்க்குத் தேரை வழங்குதல் எளிது. அவனது நாளோலக்கம் மகிழ்ச்சியைத் தருவதாகும்'' என்று காரி தேர் வழங்கும் பெருமையைக் கூறி வியந்தார்.

பின்னர் ஒருகால் புலவர், 'ஒழுங்குபட ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவியையுடைய பெருமை பொருந்திய மலையையுடையோனைப் பாடியவர்கள், நல்ல நாள் அல்லாவிடினும் புள் நிமித்தம் இடையே நின்று தடுப்பினும், செவ்வி இல்லை எனச் சென்று கூடினும் நல்லவை அல்லாத மொழியும் வார்த்தைகளைச் சொல்லினும் வறிதாக மீளக்கூடியவர்கள் அல்லர்" என்று விழுமிய கருத்தை உள்ளடக்கிய பாட்டு ஒன்றினைப் பாடினர். இச் செய்யுளால், பாடிச் செல்வோர், காரியிடம் பரிசில் பெற்றே மீள்வர் என்பது புலப்படு

கிறது. எனவே, காரி, தன்னைப்பாடி வருபவர் களிக்கப் பரிசிலைத் தந்தனுப்புபவன் என்பது தோற்றம்.

கபிலர் மலையமானிடம் விடைபெற்றுத் திருக் கோவலூரினின்று நீங்கினார்.

**கபிலரும் பேகனும்**

**பேகன்** என்பவன் கடை ஏழு வள்ளல்களில் ஒருவன். இவன் பொதினி மலையை உடையவன்; ஆவியர் குடியிற் பிறந்தவன். புலவர் இவனை 'வையாவிக் கோப்பெரும் பேகன்' எனவும் வழங் குவர். இவன் வரையாதளிக்கும் வள்ளல். இவ் வள்ளல் ஒருகால் மலைவழியே செல்கையில் மயிலொன்று தன் சிறகை விரித்து ஆடிக்கொண்டி ருந்தது. அது குளிருக்காற்றாது வருந்தி நடுங் கினது என எண்ணிய பேகன், தான் மேற்போர்த் திருந்த உயர்ந்த பட்டாடை ஒன்றினை அதன் மேற் சாத்திச் சென்றனன். இச்செய்கையால் இவனது தரும சிந்தை நன்கறியப்படும்.

இப்பேகனுக்கு உருவிலும் திருவிலும் சிறந்த மனைவி ஒருத்தி இருந்தனள். அவள் பெயர் 'கண்ணகி' என்பது. பேகன் எக்காரணத்தாலோ அவளைத் துறந்து பரத்தை ஒருத்திபால் அன்பு கொண்டு ஒழுகினன். அதனால் வருந்திய கண்ணகி அரண்மனையில் வாடிக் கிடந்தாள். இவ்வரலாற்றை உணர்ந்த புலவர் பலர் பேகனி டஞ் சென்று அவனுக்கு நல்லறிவுறுத்தினர். அவர்

களில் நம் கபிலரும் ஒருவராவர். அவர் நேரே அரண்மனைக்குச் சென்றார்; அங்குப் பேகனைக் காண்பதற்குப் பதிலாக, கைவளை சோர்ந்தும், கண்கள் குழிந்தும், மதி ஒத்த முகம் வாடியும், குழல் அவிழ்ந்தும் சோர்ந்து நின்ற கண்ணகியைக் கண்டார்; விஷயத்தை உணர்ந்தனர். உடனே புலவர் பேகனிடம் ஓடோடியும் சென்றார்; அவன் பரத்தையோடு வாழ்வதைக் காணச் சகியாத புலவர் அவனைக் கண்ணுற்று,

குறமக்கள், 'மலையை மழை வந்து சூழ்க' என்று மிக்க பலியைத் தூவுவர்; அம்மழை மிகுதியாகப் பெய்தலால் அப்பெயல் அமைந்த முகில் மேலே போக வேண்டுமெனத் தெய்வத்தைப் போற்றுவர்.

மழை பெய்த களிப்பால் உவகை கொண்டு மலைச் சாரலின் கண் புனத்திளையை உண்ணுவர். அத்தகை மக்களையுடைய நாட்டை உடையோய்! சினத்தினாற் செய்யும் போரையும் கைவண்மையாற் கொடுக்கும் கொடையினையும் உடையாய்! விரைந்த குதிரையைப் பெற்ற பேக! சுரத்தின் கண்ணே நடந்து வருந்திய எனது சுற்றம் பசியால் வாடியது. அதனால், கடிப்பு அறையப்பட்ட முரசு போல ஒலிக்கப்பட்ட அருவியையுடைய பெரிய உயர்ந்த மலையின் கண் சிறிய ஊராகிய நினது அரண்மனை வாயிற் கண்ணே வந்து தோன்றி, வாழ்த்தி நின்று நின்னையும் நின் மனையையும் பாடினேன். அப்போது இன்னாதாகச் சொரியப்

பட்ட கண்ணீரை ஒழித்தல் மாட்டளாய் வருந்தி அழுதாள் ஒருத்தி. அம்மங்கை யாவளோ?", என்று பேகனும் மனமுருகக் கூறினர்.

பின்னர்ப் புவவர் அங்கு நின்றும் நீங்கி, பறம்பு நாட்டை அடைந்து, வேள்—பாரியோடு இனிது உறைவாராயினர்.

## மூவேந்தர் முற்றுகை

பாரிவேளது புகழ் தமிழ்நாடுகளில் பரவ முடியுடை மூவேந்தரும் அவன் மீது பொறாமை கொண்டனர். பொறாமை என்பது மக்கள் மனத்தே உண்டாகும் ஒரு தீய எண்ணம். அஃது அறியாமையால் உண்டாவதேயன்றி வேறன்று. கற்றோராயினும் மற்றோராயினும், வறிஞராயினும், செல்வராயினும், இத்தீய எண்ணம் இல்லாதார் இலர். பிறரது செல்வப் பெருக்கைக் கண்டு, அவர் மீது பொறாமை கொள்பவர் பலர். பிறர் கல்வியறிவைப் பார்த்து, தம்மினும் மேம்பட்டவராய் அவர் விளங்குதலைக் காணச் சகியாதார் பலர். பிறர் தமது கொடைத் திறத்தால் எய்தும் புகழைக் கண்டு அவர் மீது பொறாமை கொள்பவர் சிலர். வேந்தராயினும் முற்றும் துறந்த பெரியராயினும் இப்பொறாமை என்னும் கொடிய பேய் அவர்களைப் பிடித்துத் தன் ஆட்சியை செலுத்துதல் கண்கூடு.

பொறாமை கொண்ட மூவேந்தரும் ஒன்று சேர்ந்து தத்தம் தானைகளோடு சென்று

பாரியைப் போரில் வென்றுவிடத் துணிந்தனர். அவர், கடல் போன்ற தம் சேனைகளோடு புறப்பட்டு, பறம்பு நாட்டை அடைந்தனர்; பறம்பு மலையினை முற்றுகையிட்டனர். இச் செய்தி பாரிவேளுக்கு எட்டியது. வள்ளன்மையிற் சிறந்த பாரி, மூவேந்தருடைய செய்கைக்கு வெகுண்டிலன்; அவர்களை எதிர்த்திலன்; தனது அரணுக்கேற்ற பாதுகாவலை வைத்து, அரண் மனையுள் இனிதிருந்தான். அரணுள் இருந்தோர் அனைவர்க்கும் வேண்டிய உணவுப் பொருள்கள் அரணுள் இருந்தமையால் பாரியும் அவனுடைய குடிகளும் துன்பம் இன்றி இன்பத்தோடு இருந்தனர்.

சில மாதங்கள் சென்ற பின்னர், அரணுள் இருந்தவர்களுக்கு உணவுப் பொருள்கள் குறைந்தன. அவ்வேளை, புலவர் பெருமானான கபிலர் தாம் வளர்த்து வந்த எண்ணிறந்த கிளி களைத் தினந்தோறும் அரணுக்கு வெளியே விட்டார். அவை விளைநிலங்கட்குச் சென்று நெற் கதிர்களைக் கொண்டு மீளும். அவற்றை அரிசி மணிகளாக்கி அரணில் இருந்தோர் உண்டு வந்தனர்.

இங்ஙனம் நாட்கள் பல கழிந்தன. கபிலர் முதலாக அரணுள் அகப்பட்டோர், 'இனி உணவின்றி வருந்த நேரினும் நேரும்' என அஞ்சினர். மூவேநதரும் பாரியை வெல்ல இயலாது மனஞ் சலித்தனர். அவ்வமயம் கபிலர் அரண்

சுவர்மீது நின்று முற்றுகை இட்டிருந்த மூவேந்தரையும் நோக்கி, 'தமிழ் வேந்தீர்! பாரியினது அரணை வீணே முற்றுகையிட்டுச் சலித்தீர்.

அவனது பறம்பு இரங்கத்தக்கது. அஃது உழவரால் உழுது விளைக்கப்படாத நான்கு விளைவுகளை உடையது. அவற்றுள் முதலாவது, சிறிய இலையையுடைய மூங்கில் நெல் விளையும்; இரண்டாவது, இனிய சுளையுடைய பலாவினது பழம் ஊழ்க்கும்; மூன்றாவது, கொழுவிய கொடியையுடைய வள்ளிக்கிழங்கு தாழவிருக்கும்; நான்காவது, இம்மலையரணில் தேன் மிக்குள்ளது. பாரியினது பறம்பு மலை அகல நீள உயரத்தால் வானிடத்தை ஒக்கும். இத்தகைய வளங்களைப் பெற்ற பரம்பு மலையில் உள்ள பாரிவேளை நீவிர் வெல்லுதல் எளிதன்று. பெருமையைக் கொண்ட முரசினையுடைய நீவிர் மூவேந்தரும் முற்றுகையிடினும், மிகுந்த யானைப்படை தேர்ப்படை உடையீராயினும், உங்கள் முயற்சியால் இம்மலையரணைக் கொள்ளமாட்டீர். நுமது வாள் வலியால் எம்மரசன் தளரான். அதனை யான் நன்கு உணருவேன். யாழை வாசித்து நும் விறலியர் பின்வர ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் நீவிர் அவனிடம் செல்லின், அவன் உங்கட்கு நாட்டையும் பரிசிலாகத் தருவன்.

அவ்வாறு செய்யாது எத்துணைக் காலம் முற்றுகை இட்டிருப்பினும் பயன் பெற மாட்டீர். மீண்டும் கூறுவேன் கேளும். இப்பறம்பு நாடு

மூந்நூறு ஊர்களை உடையது. இது குளிர்ந்த நல்ல நாடு; அம் மூந்நூறு ஊர்களையும் பரிசிலர் பாடிப் பெற்றனர். அப் பரிசிலர் போன்று நீவிரும் பாடுவீராயின், உமக்குப் பறம்பு மலை அன்றிப் பாரியும் நாமும் உள்ளோம்," என்று பாரியது வள்ளன்மையையும் மலைநாட்டு வளத்தையும் கூறி முடித்தனர்.

புலவர் கூறியவை உண்மை எனவே மூவேந்தரும் உணர்ந்தனர்; ஆயினும், பாரியை எவ்வாற்றாலும் கொல்ல வேண்டும் என்று துணிவு கொண்டனர்; தங்களிடம் குடி கொண்டிருந்த பொறாமை காரணமாக, ஏதோ ஒரு சூழ்ச்சி செய்து பாரியைக் கொன்று விட்டனர். இரவலர்க்கு இனியவனாய் விளங்கிய பாரிவேள், அறிவிழந்து பொறாமையின் வயப்பட்ட மூவேந்தரால் மாண்டதைக் கண்ட அவனது ஆருயிர் மனையாள் உயிர் நீத்தார்.

### கபிலர் புலம்பல்

பாரிக்கு உயிர் நண்பரான கபிலர், தமது நண்பனும் கொடை வள்ளலுமான பாரிவேள் உயிர் நீத்ததைக் கண்டு பெரிதும் வருந்தினார். அவர் அவனது புகழைக் கூறிப் புலம்புபவராய், "அழகிய பாரிவேளது பறம்புமலையில் உண்டாகும் தேறல் பாரி போன்று இனிமையானது; அவன் இறந்ததால் அது கழிந்தது; பறம்பு நாட்டு மகளிர் மிக்க அழகுடையவர்கள்; குளிர்ந்த கண்ணை

யுடையவர்கள்; இனிய முறுவலை உடையவர்கள்; நெடுவரை ஏறி முன்பு வேந்தனது கலிமாவை எண்ணுவர்; எம் வேந்தன் இறந்து பட்ட இப்போது ஈத்திலைக் குப்பையேறி உமணர், உப்பு செலுத்தும் சகடத்தை எண்ணுவர். நோவேன், யான், என் வாழ்நாட்கள் கெடுவதாக; புது வருவாய் இடையறாது வரும் அகன்ற நாடு பகைவர் கொள்ளலாயிற்றே!

"சனிமீன் புகைகளோடு கூடிப் புகைந்தாலும், எல்லாத் திசைகளிலும் புகை தோன்றினும் தென்றிசைக் கண்ணே 'வெள்ளி'போக்கு உறினும், பாரிவேளது நாட்டு, வளம் வற்றாது, வயல்களில் விளைவு அதிகமாக உண்டாகும்; புட்பங்கள் அலரும்; பெண்கள் வருத்தம் இன்றிக் குழவிகளை ஈனுவார்கள், மழை ஒரு போதும் அந்நாட்டில் பிழையாது. பாரியது வள்ளன்மையன்றோ இவற்றிற்குக் காரணம்! இத்தகைய மன்னன் மாண்டனனே! எட்டாம் பக்கத்துப் பிறை போலும் வளைந்த கரைகளையும் தெளிந்த நீரையும் உடைய சிறிய குளம் பாதுகாப்பார் இல்லாமையால் உடைந்துவிடும் போலும்!

கூரிய வேலையும் திரண்ட தோளையும் உடைய பாரிவேளது குளிர்ந்த பறம்பு நாடு இனிச் சீர்கெட வேண்டுவதே. பாரியின் பெருமையை யான் என்னென்று இயம்புவேன்! நிழல் இல்லாத நெடிய வழியில் நின்ற தனிமரம் போல முரசையுடைய அரசரினும் மிகுந்து இரவலர்க்கு வழங்கும்

வண்மையை உடையவன் பாரி; அவனது நாடு முன்பு, மெல்லிய தினையாகிய புதுவருவாயை உடையது; வேங்கை மரங்களை உடையது; கதிரினது அடியும் தலையும் ஒழியாமல் மிகக் காய்க்கும் பயிர்களை வயலிடங்களில் உடையது. வரகு அதிகமாக விளைவதும் அவ்வரைக் கொடிகள் அதிகமாக உள்ளதுமாகிய இந்நாடு இனிக் கெடும் போலும்'' என்று நாட்டையும் பாரியையும் நினைந்து மனம் வருந்திப் புலம்பி அழுதார்.

## கபிலரும் பாரிமகளிரும்

பாரி இறந்தவுடன் கபிலரும் இறந்திருப்பார். ஆயின், பாரி, தான் இறக்கும்போது அவரை அங்ஙனம் செய்யக் கூடாதெனக் கேட்டுக் கொண்டனன். அதுவன்றி, பாரியின் மகளிரும் தம் மாணவிகளுமான இரு பெண்களையும் காப்பாற்றுவார் இன்மையாலும் கபிலர் உயிருடன் இருக்க நேர்ந்தது. அப்பெண்மணிகட்குத் தக்க அறிவும் பெருமையும் உடைய மன்னரைத் தேட நினைந்து அவர்களை அழைத்துக்கொண்டு பறம்பு நாட்டை விட்டுப் புறப்பட்டார் புலவர்; அவ்வாறு புறப்படும்போது பாரியை நினைந்து புலம்பினார்; அவனது வள்ளன்மையை நினைந்து வருந்தினார்; பறம்பு அரணைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கண்ணீர் ஆறாய்ப் பெருக, ஆற்றொணாத் துயரால் உள்ளத்தினின்றும் பொங்கி எழுந்த அன்புடைப் பாடல்களால் பாரியையும் பறம்பு

மலையையும் நாட்டையும் புகழ்ந்து கொண்டே சென்றனர்.

சென்றவர், ஓர் ஊரில் அன்றிரவு தங்கினர். அவ்விரவு நிலாத் தோன்றியது. அந்நிலவைக் காணப் பாரி மகளிர், தாம் அதற்கு முந்திய நிலாக் காலத்தில் தமது அரணுள்ளே தந்தையோடு இனிதே வாழ்ந்ததையும் அடுத்த நிலாக் காலத்துத் தாம் தந்தையை இழந்து தங்கள் பறம்பையும் இழந்து, தமியராய்ப் பிறர் இருப்பில் தங்க நின்றதையும் எண்ணி வருந்தினர்.

பின்னர், கபிலர் அம்மகளிரை அழைத்துக் கொண்டு பல நாட்கள் வழி நடந்து **இளவிச் சிக்கோ** என்னும் அரசனிடம் சென்றனர். அவன், நன்னன் என்னும் வேளிர்குலத் தலைவனது வழித் தோன்றல். அவன் கபிலரை வரவேற்றான். கபிலர், பாரி மகளிரை அவனுக்குக் காட்டி 'முகிலாலும் உச்சி அறியப்படாத உயர்ந்த மலைக்குத் தலைவ! நினது குளிர்ந்த மலையின்கண் ஓங்கிய பசிய இலையையுடைய பலாமரங்களின் பழத்தைக் கவர்ந்து கொண்ட கடுவன், சிவந்த முகத்தை உடைய தனது மந்தியுடனே சேர்ந்து வாழும். அப் பலா பழங்களை மிக்குடையாய் நீ! நினத்தைத் தின்று களித்த நெருப்புப் போலும் தலையை யுடைய நெடிய வேலினையும், களத்தைத் தன தாக்கிக் கொண்டு வெகுளும் தறுகண் யானையை யும், விளங்கிய மணிகளால் செய்யப்பட்ட வளைந்த ஆபரணத்தையும் உடைய விச்சிக்

கோவே, மிக்க விளைதலையுடைய நாட்டை உடையோய்! போரில் பகை வேந்தரது மிடுக்கை அடக்குபவனே! இம் மகளிர், கொடி முல்லை தன்னை நாத்தழும் பேறப் பாடாதிருந்தும் 'மணிகள் ஒலிக்கும் நெடிய தேரைக் கொள்க' என்று சொல்லிக் கொடுத்த வள்ளன்மையிற் சிறந்த பாரிவேள் பெண்கள். யான் பரிசிலன்; அது வன்றியும் நிலைபெற்ற அந்தணன். நீயோ பகைவரைப் போர் செய்யும் முறைமையாற் பொருது தாழ்விக்கும் மேன்மையுடையோன். ஆனால் நினக்கு யான் தருவதைக் கொள்வாயாக" என்றார்.

பாரி மகளிரைத் தன்னை மணஞ்செய்து கொள்ளுமாறு புலவர் வேண்டினர் என்பதை இளவிச்சிக்கோ உணர்ந்தான்; மூவேந்தர்க்கும் பகைவனான பாரியின் மகளிரைத் தான் மணப்பின் அதனால் என்ன தீமை விளையுமோ எனப் பயந்தான். அவ்வேள் கபிலரை நோக்கி, "புலவீர்! இப் பெண்மணிகளை யான் மணந்துகொள்ள இயலாத நிலையில் உள்ளேன்" என்று உறுதியாய் உரைத்தான்.

கபிலர், அம்மகளிரை அழைத்துக்கொண்டு கொடையாளிகளுள் ஒருவனான **இருங்கோவேள்** என்பவனை அடைந்தார்; அடைந்து அவனை நோக்கி, "மாலையை அணிந்த யானையுடைய இருங்கோவே! நீ, வள்ளன்மையிற் சிறந்து நாற்பத்தொன்பது தலைமுறை தொன்று தொட்டு வந்த

வேளிருள் வைத்துப் போற்றற்குரியாய் வெற்றிப் போரையுடைய தலைவ! புலிகடி மாலே! வானாற் கவிக்கப்பட்டுப் பெருங்கடல் சூழ்ந்த இப்பூவுலகத்தின் கண் அணுகுதற்கரிய வலிமையுடைய பொன் னுண்டாகும் பெரிய மலைக்குத் தலைவ! வெற்றி வேலைத் தாங்கிய பகைவர் அஞ்சும் படைக்கும் கேடில்லாத நாட்டிற்கும் உரியவனே! என்னுடன் வந்துள்ள இம்மகளிர் யாரென்று வினவுவாயாயின், இவர்தாம், ஊர்கள் எல்லாவற்றையும் இரப் போர்க்கு வழங்கித் தேரை முல்லைக்கொடிக்கு வழங்கியவனும், தொலையாத நல்ல புகழையுடையவனும், பறம்பிற்குத் தலைவனும் ஆன பாரி வேள் பெண்கள். யான் இவர் தந்தையின் தோழன் ஆதலால், இம்மகளிர் என் மகளிர் ஆவர்; யான் இவரை நினக்குத் தர, நீ இவரைப் பெறுக என்று இருங்கோவேளது புகழையும் பாரிவேளது புகழையும் தான் மேற்கொண்டுள்ள வேலையையும் கூறி அப்பெண்களை மணந்துகொள்ளுமாறு வேண்டினர்.

இருங்கோவேளும் இளவிச்சிக்கோவைப்போல மூவேந்தருக்கும் பயந்தவனாய், அம்மகளிரை மணக்க உடன்பட்டிலன். அவன் உடன்படாததைக் கண்ட கபிலர் மனம் நொந்தார், அவர் மன வருத்தத்துடனே அவனை நோக்கி, "பெருமானே! புலவர் மனம் வருந்துமாறு அரசர் நடந்து கொள்ளல் ஆகாது. உன்னை ஒத்த அறிவினை யுடைய உனது குடியுள் ஒருவன் பெரும்புலவரான

**கழாத்தலையார்** என்பவரை அவமதித்தான். அது காரணமாக, வெற்றி நிலை பெற்றுச் சிறந்த புகழோடு இருந்த 'சிற்றரையம், பேரரையம்' என்னும் அவனது நாடு கேடுற்றது. என் வார்த்தையை நீ அவமதிக்கலாகாது. பெரிய மலையிடத்து ஊர்களையுடைய நாட்டை உடையோய்! யான் நின்னை விடை கொண்டேன்" என்று கூறி அகன்றார்.

பின்னர்ப் புலவர் சங்கவை அங்கவை என்ற அப்பெண்கள் இருவரையும் அழைத்துச் சென்று திருக்கோவலூரைத் தலை நகராகக் கொண்டு அரசாண்டு வந்த மலையனை அடைந்தார். அவன் சிறந்த அரசன்; வென்றி மிக்கோன். அவன் பாரியினது பரந்த புகழைக் கேள்விப்பட்டிருந்தான். ஆதலின், அவன் பாரியினுடைய மூத்த மகளான சங்கவை எனபாளை மணந்து கொண்டான்.

அதன் பிறகு, கபிலர் இளையளான **அங்கவை** என்பாளைப் பார்ப்பார் சிலரது பாதுகாவலில் வைத்தார்; வைத்த பின்னர், பாரிவேளது பிரிவாற்றாது உயிரைவிடத் தீர்மானித்தார்; ஆனால் தாம் இறப்பதற்குள் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கண்டு வரவேண்டுமென்று விருப்பங்கொண்டு, சேர நாட்டை நோக்கி நடந்தார்.

**ஏழாம் பத்தைப் பாடியது**

சேர நாட்டை அடைந்த கபிலர் சேரனைப் புகழ்ந்து பத்துப் பாடல்களைப் பாடினார். அப்பாட்டுக்களின் சுருக்கம் வருமாறு:

"சேரர் பெரும! தேன் ஒழுகும் பலாப் பழங் களை மிக்குடைய நாட்டையுடைய பாரிவேள் எனது ஆருயிர்த்தோழன். அவன் இறந்து பட்டனன், யான் நின் பால் வந்தேன். நீ எனக் களிப்பாய் என்று சொல்லி அளவு கடந்து உன்னை இல்லாத வார்த்தைகளால் புகழ்பவன் யான் அல்லன்; உண்மையையே எக்காலும் சொல்வேன்; அன்பு, அருள், அடக்கம், புலமை, அறிவு, ஈகை முதலாய நற்குணங்கள் பாரியிடத்து இருந்தன. அவை உன்னிடத்தேயும் இருக்கக் காண் கின்றேன். உலகம் எல்லாம் நின் புகழைப் பலபடக் கூறுகின்றது.

நின் பாசறையின் கலக்கத்தின் கண்ணே அதே புகழை நினக்கே சொல்ல யான் வந்தேன். கொற்ற வேந்தே! நின் பகைவர் நின்னைப் பணிந்து திறை தருவர். நினது கட்டளைப்படி நடப்பர்; நீ அவர்கட்கெல்லாம் அரசர்க்கு அரசனாக விளங்குகின்றாய். நின் பெருமை செப்பவும் எளிதோ? நினது அகன்ற மார்பு வீரலட்சுமி தங்கப் பெற்றது. நீ, பொய்ச் சொற்களைச் சொல்லி அறியாய். மேன்மை பொருந்திய இக்குணங்கள் நினக்கு இயற்கை யாகவே அமைந்துள்ளன. போரில் வெல்லும் தலைவ! முன் பிறர்பால் வெற்றிபெற்று நின்க்கு அழிந்த மன்னர் நின்னோடு பகைமாறித் தாழ்வு கூறா நிற்ப. அதற்கு ஏற்ப நீயும் நின் பெருமையும் கண்ணோட்டமும் ஆகிய நுகங்கொண்டு வெற்றி

கூர்ந்தனை. செல்வக் கோவே! சேரலர் மருகனே! வாழியாதனே! நின் குணங்கள் இவ்வாறாகிய அதனாலே உலகம் செய்த நன்று உண்டெனின், நீ பல ஆம்பலாகிய ஆயிர வெள்ள ஊழி வாழ்க! உலகத்தில் பல திறப்பட்ட அரசர் உளர். அவர் அரசராவரோ? அரசர்க்குரிய உயரிய குணங்களை அன்னவர் பெற்றிலரே! புலவர்களை ஆதரிப்ப தில்லை; **மொழியினை வளர்ப்பதில்லை**; நற்குணங் களில்லை; நற் செயல்களில்லை; அவர்களை அரசர் என்பதிற் பயன் என்? அவர்களால் யார், என்ன நன்மையைப் பெறுகின்றனர்? அண்ணலே! தோன்றலே! உத்தம குணங்கள் நிறைந்த அரசன் நீ; புலவர் பெருமையையும் தமிழ் அருமையையும் உணர்ந்து நடப்பவன் நீயே. வலிபெற்ற நின் தாள் வாழ்க. யான், நின்னைக் கண்டு களிக்க வந்தேன். வயவர் பெரும! வில்லோர் செல்வ! சேயிழை கணவ! பாணர் புரவல! புகழ்சால் மார்ப! நின்னை நாடி வந்தோர்க்கு 'இல்லை' என்று கூறி அவர் மனம் உளைந்து செல்லுமாறு செய்யாது, கேட்டதைக் கொடுத்துக் களிக்கும் செம்மலே! நினது பெருமையை யான் என்னென்று கூறுவேன்!

நினது நாட்டில் விளையும் நெல்லைப் பாவலர்க் கும் இரவலர்க்கும் வாரிவாரிக் கொடுக்கின்றனை; 'தன் நாட்டில் விளையும் நெல்லை உணவாகக் கொடுத்தலில் தவறான் சேரமான்' என்று யாவரும் நின்னைப் போற்றத்தக்க நிலையை அடைந் துள்ளனை. முத்துக்களையும் பெரிய மூதூர்களை

யும் பாணர்க்கும் புலவர்க்கும் தந்துள்ளாய் என்பதை அறிந்து பாணர்பலர் இன்றும் நின்னைக் காண வருகின்றனர். மணங் கமழ் மார்ப! நின் தாள் நிழலில் உள்ளோர் இன்பத்தையே நுகருகின்றனர். நின்னைப் பாடாத பாணன் இலன்; போற்றாத புலவன் இலன் எனின், நின் பெருமையை என் என்பது! கொற்ற வேந்தே! இலங்கு கதிர் திகிரியினையுடைய நின் முன்னோர் நிச்சயமாக நின்னைப்போல் அசைவில்லாத மேற்கோளை உடையராகையாலே, இம்மண்ணுலகத்தினை மேற்பட்ட புகழோடு ஆண்டாரராவார். அவர்கள் மரபில் தோன்றிய நீயும் புகழோடு வாழ்தலைப் பொருந்தினை. நின் பெருமையை யாவரே விரித்துரைக்க வல்லார்!"

இங்ஙனம், கபிலர் பெருமான் பத்துப் பாக்களைப் பாடி, அவற்றின் மூலமாகச் சேரனின் ஒப்பற்ற குணாதிசயங்களை விரித்துப் புகழ்ந்தார். சேரன் பெரு மகிழ்வு அடைந்து, புலவர்பால் அன்புகொண்டு. **நூறாயிரங் காணம் பொன் அளித்ததோடு**, 'நன்றா' என்னும் குன்றின் மீதேறி நின்று தன் கண்ணிற் கண்ட **நாட்டையும்** காட்டிக் கொடுத்தான்.

## கபிலர் உயிர் நீத்தமை

கபிலர் சேர நாட்டினின்றும் நீங்கி, திருக்கோவலூரை அடைந்தார்; அடைந்தவர், பெண்ணை நதியின் மத்தியில் ஓர் மணல் திட்டில்

அமர்ந்து, "மலை நாட்டையுடைய பாரி! பெரிய கைவண்மையையுடையாய்! நீயும் யானும் கலந்த நட்பிற்குப் பொருந்த யானும் நின்னுடன் கூட வருவதற்கு மனம் இல்லாமையாலே, 'நீ ஈண்டுத் தவிாக' என்று சொல்லி இவ்வாறு மாறுபட்டனை யாதலால் நினக்கு யான் பொருந்தினவன் அல்லேன்.

அதனால், நீ எனக்கு உதவி செய்த காலங்களிலும் என்னை வெறுத்திருந்தாய் போலும். இவ்வாறு யான் பொருந்தினவன் அல்லேனாயினும் இப்பிறப்பின்கண் நீயும் நானும் கூடி இன்புற்றிருந்ததுபோல, மறு பிறப்பினும் நின்னோடு கூடி வாழ்தலை ஊழ் கூட்டுக" என்று மனமுருகப் பாடி, வடக்கிருந்து யோக நெறியால் மூலக்கனலை எழுப்பி உயிர் நீத்தனர்.

இவர் பாக்கள் சங்க நூல்களில் பல உள. அவை உவமைகள் நிறைந்தவை; பழமொழிகள் பல்கியவை; வருணனைப் பகுதிகள் வாய்ந்தவை; பல உயரிய நீதிகளைப் புகட்டுபவை; அக்காலத் தமிழ் மக்கள் பழக்கங்கள், நாட்டு நிலைமை, அரசர் நிலைமை, இன்ன பிறவும் இனிதின் இயம்புபவை. ஆதலின் நீவிர் இப்பாடல்களைப் பன்முறையும் படித்து உணர்தல் பெரு நன்மை பயக்கும்.

# பரணர்

## பிறப்பும் இளமையும்

பரணர் என்னும் புலவர் பெருமான் கடைச் சங்கப் புலவர் **நாற்பத்தொன்பதின்மரில்** ஒருவர். இவர் கபிலரை ஒப்புக் கவி பாடுவதில் வல்லவர். இலக்கண நூல்களில் உம்மைத் தொகைக்கு உதாரணங் காட்ட வந்த ஆசிரியர்கள் 'கபில பரணர்' என்று கூறிப் போந்தது, இவ்விரு புலவர்களும் ஒரே காலத்தில் கல்வி முதலியவற்றில் ஒரு தன்மையாக மேம்பாடுற்று விளங்கினமையைக் காட்டும். இவர் இன்ன குலத்தவர் என்பது தெரியவில்லை. இவர் இளமையில் நல்லாசிரியரிடத்துக் கல்வி பயின்று, நினைத்த மாத்திரத்தானே கவி பாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இவரது புலமைத் திறத்தையும் பரந்த ஆராய்ச்சியையும் இவர் அரும் பெரும் பாடல்களால் நன்கறியலாம்.

## பரணரும் இளஞ்சேட் சென்னியும்

இளஞ்சேட் சென்னி என்பவன் சோழ நாட்டை ஆண்டுவந்த சோழ மன்னவன். இவன் கரிகாற் பெருவளத்தானின் தந்தை; அழுந்தூர் வேளிடம் மகட்கொண்டோன். இவ்வரசன் வீரத் திற் சிறந்தவன்; கொடையிலும் அங்ஙனமே.

இவனது புகழைக் கேட்ட பரணர் இவனைச் சென்று காண விருப்பங் கொண்டார்; விரும்பிய வண்ணம், மதுரையினின்றும் நீங்கிச் சோழ நாட்டை அடைந்தார்; சோழனைக் கண்டார். சோழர் பெருமான் தமிழருமையையும் புலவர் பெருமையையும் நன்குணர்ந்தவன் ஆதலின், பரணரை முகமன் கூறி வரவேற்றான்; அவருக்கு நல்விருந்தளித்தான். புலவர் சோழனது நற்குண நற்செயலைக் கண்டு களிப்படைந்து, அவனது பெருமையை கூறுபவராய்,

'வாள் வெற்றியைத் தருதலாற் குருதிக்கறை பட்டது; செக்கர் வானத்தினது அழகை ஒத்தது. கால் புடை பெயர்ந்து போர் செய்து களத்தைத் தமதாக்கிக் கொள்ளுதலால் வீரக்கழல் ஒலித் தலைச் செய்கின்றன; கொல்லும் ஆனேற்றினது கோட்டை ஒத்தன. பரிசைகள் ஒலித்துத் தைத்த அம்புகளால் துளை பெறறுள்ளன: குதிரைகள், பகைவரைக் காட்டப் பலவாறு போர்க்களத்தில் வேகமாய்ப் பறந்தன;

அதனால் அவற்றின் கடிவாளம் இறுகி வாய் செந்நிறம் அடைந்தது. அதனால் அவை, மான் முதலானவற்றின் கழுத்தைக் கவ்வி உதிரம் ஊற்றி உண்ட புலியை ஒலித்தன. களிறுகள், கதவை முறித்து வெகுண்டு உலாவி நுனி தேய்ந்த வெளிய கோட்டை உடைமையால் உயிரை உண்ணும் கூற்றை ஒத்தன. நீதான், அசைந்த தலையாட்டம் அணிந்த கதியையுடைய குதிரையாற் பூட்டப்

பட்ட பொற்றேரின் மேல் பொலிவொடு தோன்று தலாற் கரிய கடலின் கண்ணே ஓங்கி எழுகின்ற சிவந்த ஞாயிற்றினது ஒளியையுடையை அத் தன்மையை ஆதலால், நின்னைச் சினப்பித்தவ ருடைய நாடு, தாயில்லாத உண்ணாக் குழவி போன்று ஒழியாது கூப்பிடும்."

எனச் சோழனது பலதிறப்பட்ட போர் வன்மையைச் சிறப்பித்துப் பாடினார். அவ்வளவில் சோழ புலவரிடம் மெய்யன்பு பாவித்து அவருக்கு வேண்டும் பரிசிலை விரும்பித் தந்தனன். புலவர் பெருமகிழ்ச்சி தோன்ற அவனைத் தம் வாயார வாழ்த்தி, மதுரையை அடைந்தார்.

**பரணர் போர்க்களத்து இரங்கல்**

சேர நாட்டை ஆண்டுவந்த நெடுஞ்சேர லாதன் என்பானுக்கும் சோழன் வேல் பல் தடக்கைப் பெருநற்கிள்ளி என்பானுக்கும் போர் மூண்டது. போர்க்களத்தில் ஒருவரை ஒருவர் குத்திக்கொண்டு இருவரும் மாண்டனர். அது கேட்ட கழாத்தலையார் என்னும் புலவர் போர்க் களத்துச் சென்று பாடிப் புலம்பினர். இருபெரு வேந்தர் இறந்த செய்தியைக் கேட்ட பரணரும் போர்க்களத்தை அடைந்தார்; வேந்தர்கள் மாண் டதை நினைந்து மனம் வருந்தினார்; இருவரையும் நினைந்து பின் வருமாறு கூறிப் புலம்பினர்.

"எல்லா யானைகளும் அம்பாற் கலங்கி இனி மேல் உண்டாக்கும் போர் குன்றிப் படையிடத்துப்

பட்டன. வெற்றிப் புகழ் மாட்சிமைப்பட்ட குதிரைகள் எல்லாம் ஆண்மைக்கேற்ற வீரப் பாட்டுக் கூற்றையுடைய மேலாட்களுடனே அக் களத்தே பட்டன. தேர் ஏறி வந்த பெருவீரர் அனைவரும் இப்போரில் தம் ஆவி நீத்தனர். வாரால் விசிக்கப்பட்டுத் தொழில் மாட்சிமைப் பட்ட மயிர் சீவாது போர்க்கப்பட்ட கண்ணை யுடைய முரசங்கள் யாவும் தட்டுவார் இறந்தமை யால் இருந்து கெட்டன; சாந்து அமைந்த மார்பின் கண்ணே நெடிய வேல் பாய்ந்தனவாக அரசரும், பொருது அக்களத்தின் கண்ணே மடிந்தனர். கழனிக்கண் ஆம்பல் தண்டாற் செய்த வளை யணிந்த கையினையுடைய மகளிர், வேலை செய் யும் குளிர்ந்த புனங்களைக் கொண்ட புதுவருவாய் அறாத ஊர்களையுடைய அழகிய அகன்ற இடத்தையுடைய நாடு, இனி, என்ன வருத்த முறுமோ!"

## பரணரும் பேகனும்

பரணர், வையாவிக் கோப்பெரும் பேகனைக் காணச் சென்றார். நாம், இப்பேகன் என்பவனைப் பற்றிக் கபிலர் வரலாற்றில் முன்னரே கூறியுள் ளோம். அவன் புலவரைப் பெரிதும் வரவேற்று உபசரித்தான். அவனது பெரும் புகழைக் கேள்வி யுற்ற புலவர் அவனைப் புகழ விரும்பியவராய், "வற்றிய குளத்தின் கண்ணே, பெய்தும் அகன்ற விளை நிலத்தின் கண்ணே சொரிந்தும் இவ்வாறு

குளத்தும் விளை நிலத்தும் பெய்யாது, களர் நிலத்தை நிறைத்தும், வரையாத மரபினையுடைய மழைபோல மதமிக்க யானையினுடைய கழல் புனைந்த காலையுடைய பேகன், கொடையிடத்துத் தான் அறியாமைப்படுதலல்லது, பிறர் படை வந்து கலந்து பொரும்பொழுது அப் படையிடத்துத் தான் அறியாமைப்படான்?" என்ற பொருளை அமைத்துக் கொழுவிய பா ஒன்றைப் பாடினர். அவ்வளவில் பேகன் பெருமகிழ்ச்சியுற்று, பரணர்க்குப் பல வரிசைகள் தந்து, தேரும் ஈந்து அனுப்பினன்.

அவர், பேகன் தந்த தேர்மீது வருங்கால் சுரத்திடைத் தங்கினர். அவ்விடத்தில் வேறு பாணர் பலர் தங்கி இருந்தனர். அவர்களுள் ஒருவன் பரணரைப் பார்த்து, "எவ் வள்ளலிடம் சென்று மீள்கிறீர்?" என்று ஆவலுற்றுக் கேட்டனன். அவ்வளவில் பரணர் அவனை அன்புடன் நோக்கி, "பாணன் சூடிய பொன்னாற் செய்யப்பட்ட தாமரைப்பூ, மாட்சிமைப்பட்ட அணியினையுடைய விறலி அணிந்த பொன்னரி மாலை ஆகிய இவற்றுடனே விளங்கக்கூடிய குதிரையைப் பூண்ட நெடிய தேரைவிட்டு இளைப்பாறி ஊரின்கண் இருப்பவர்போலச் சுரத்திடை இருந்தீர்! நீர் யாவிர்? பாணரோ?' என எம்மைக் கேட்ட இரவலனே! வென்றி வேலையுடைய தலைவனைக் காண்பதன்முன் யாம் நின்னினும் வறியேம்; இப்பொழுது அவ்வறுமை நீங்கி எந்நாளும் இத்

தன்மையேம் ஆயினேம். படாத்தினை மயிலுக்குக் கொடுத்த எம் இறைவன், மதமிக்க யானையையும் மனம் செருக்கிய குதிரையையும் உடைய பேகன். அவனது கைவண்மை மறு பிறப்பை நோக்கி எவ்வளவாயினும் கொடுத்தல் அழகியது என்று கருதியதோ? எனின், அன்று; ஆயின், அது பிறரது மிடியைக் கருதிற்று'' என்று பாணாற்றுப் படையாகப் பகர்ந்தார்.

இங்ஙனம் சென்ற புலவர் சிலகாலங் கழித்து மீட்டும் பேகனை நாடி வந்தார்; அவனது அரண் மனையை நோக்கிச் சென்றார்; பேகனைக் கண்டாரில்லை; கண்ணீரும் கம்பலையுமாக நின்று கொண்டு இருந்த அவனது மனைவியைக் கண்டார்; மனம் வருந்தினார்; பேகன் அரண் மனையில் இல்லாததற்கும் அவள் வருந்துவதற்கும் உற்ற காரணத்தை உணர்ந்தார்; உடனே பேகன் இருந்த இடத்தை உணர்ந்து அங்குச் சென்றார். அவர் அவனை நோக்கி,

''இளையோய்! நீ, அருள் அற்றிருத்தல் கொடிது; மாலைக் காலம் வந்த அளவிலே சிறிய யாழை இரங்கற் பண்ணாகிய 'செவ்வழி' என்னும் பண்ணிலே நினது வளமிக்க நாட்டையும் நினது கொடைத் திறத்தையும் நினைந்து பாடினேமாக: நறுநெய்தல் போன்று பொலிந்தமையுண்ட கண்களினின்றுங் கலங்கி வீழ்ந்த இடைவிட்ட துளிகள் அணிந்த மார்பை நனைப்ப,

வருந்தி நின்ற வனிதை ஒருத்தியைக் கண்டோம்; 'இளமையை உடையையோ எம்முடைய கேண்மையை விரும்புளவானுக்கு?' என்று அவனை வணங்கிக் கேட்டேம்; அவள் காந்தள் மொட்டுப் போன்ற தன் விரலாலே தன் கண்ணீரைத் துடைத்து, "நாங்கள் அவனுடைய கிளைஞரேம் அல்லேம்; விளங்கிய புகழையுடைய பேகன் எம்மை ஒப்பான். ஒருத்தியுடைய அழகைக் காதலித்து ஒல்லென முழங்கும் தேருடனே முல்லை வேலியை யுடைய நல்லூரின்கண் எந்நாளும் வருவன் என்று பலரும் சொல்லுவர்' என்று கூறினாள்" என்று, அவன் மனைவியின் பொறுக்கலாற்றாத துயரை விரிவாக எடுத்து விளம்பினார்.

பரணர் பின்னும் அப்பேகனை நோக்கி "மெல்லிய தகைமையுடைய கரிய மயில் குளிரால் நடுங்கும் என்று அருள் சுரந்து படாம் கொடுத்த புனிதனே! அழியாத நல்ல புகழினையுடைய மதம் பட்ட யானையையும் மணஞ் செருக்கிய குதிரையையும் உடைய பேக; யாம் பசித்தும் வருவோம் அல்லேம்; எம்மாற் பரிக்கப்படும் சுற்றமும் உடையேம் அல்லோம்; களாப்பழம் போன்ற கரிய கோட்டையுடைய சிறிய யாழை இசையின்பத்தை விரும்பி உறைவார். அவ்விசையின்பத்தால் தலையசைத்துக் கொண்டாடும்படி வாசித்து **அறத்தைச் செய்வாயாக** அருளை விரும்புவோய்!' என யாங்கள் நின்னை வேண்டும் பரிசில் இதுவே! இற்றை இரவின்கண் ஏறிப்போய்க்

காண்டற்கு இன்னதாக உறைகின்றவள் பொருந்தற்கரிய நினைவால் உண்டாகிய நோயைத் தீர்ப்பாயாக" என்ற அரிய பொருளை அமைத்து, செந்தமிழ்ச் செய்யுள் ஒன்றினை அவன் மனம் உருகப் பாடினார்.

பரணர் போன்றே கபிலர் முதலாய புலவர் பெருமக்களும் சென்று அவனுக்கு அறிவுறுத்தினர் என்பது தெரிகிறது. புலவர்கள் வேண்டியதை மறாதளிக்கும் அருங் குணாதிசயங்களையுடைய அவ்வள்ளல், பரணர் முதலான சான்றோர்களின் வேண்டுகோளின்படி பரத்தையைத் துறந்து, இல்லாளை அடைந்திருப்பான் என்று நாம் கருதுதல் தவறாகாது.

**சேரன்—செங்குட்டுவன்**

செங்குட்டுவன் என்பான் சேர நாட்டை ஆண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பானது மூத்த மைந்தன். இவன் தனது இளமைப் பருவத்திலேயே அரசன் ஆனான். இவன் சேர, அரசர்களில் முதன்மை பெற்று விளங்கியவன். இவ்வேந்தன் தன் தாயான 'நற்சோணை' என்பாள் கணவனோடு உடன்கட்டை ஏறியபோது அவளது உருவத்தைச் சிலையில் செய்ய விரும்பினான்; அதன்படி கல்லைக் கொண்டுவர இமயத்திற்குச் சென்றான். அங்குள்ள அரசர்கள் இவனைப் பெருஞ்சேனையோடு எதிர்த்தனர்.

புலிக் கூட்டத்தில் சிங்கம் பாய்ந்ததைப் போலப் பகையரசர் சேனையுட் புகுந்து செங்குட்டுவன் தனது வெற்றியை நிலை நாட்டினன். சோழ பாண்டிய மன்னர்கள் செங்குட்டுவன் மீது பொறாமை கொண்டு **கொங்கர் செங்களம்** என்னும் இடத்து இவனுடன் போர் புரிந்தனர். அப்போரில் செங்குட்டுவனே வெற்றி பெற்றான்.

கடலை அரணாகக் கொண்டு தன்னை எதிர்த்த பலரை நம் சேரர் பெருமான் கடலில் தானையைச் செலுத்தித் தன் வெற்றியைப் புகழ்பெற நாட்டினன். தனக்கும் தனது நண்ப னான 'அறுகை' என்னும் அரசனுக்கும் பகைவ னான 'பழையன்' என்பானைச் செங்குட்டுவன் போரில் தோற்கடித்து வெற்றி மாலை சூடினன். செங்குட்டுவனது அம்மானான சோழ அரசன் இறந்ததும், அவன் மகன் பட்டத்தை அடைந்த போது, அது பொறாமல் சோழ வமிசத்தவர் ஒன்பதின்மர் பெருங்கலகம் விளைத்து நாட்டைக் கலைக்க, அவர்கள் அனைவரையும் செங்குட்டுவன் 'நேரிவாயில்' என்ற இடத்தில் நடந்த பெரும் போரில் தோற்கடித்துத் தன் மைத்துனனைப் பட்டத்தில் வைத்தனன்.

இங்ஙனம் செங்குட்டுவன் வெற்றி வேந்த னாய் வாழுங் காலத்தில், கோவலன் மனைவி யான கண்ணகி, தன் கணவனைக் கொல்லச் செய்த பாண்டியனைப் பழிக்குப் பழி வாங்கி,

மதுரை மாநகரை எரித்துச் சேர நாட்டை அடைந்து, ஒரு மலைமீதேறி வானுலகம் புக்காள்.

இவ்வரலாற்றைச் சாத்தனாரால் உணர்ந்த செங்குட்டுவன் தன் நாடு நோக்கி வந்த கண்ணகியைத் தான் வழிபடுதல் இன்றியமையாதது என்று எண்ணி, அவ்வம்மைக்குப் படிவஞ் சமைத்தற்குரிய சிலையை இமயமலையினின்றும் எடுத்து வந்து, படிவஞ் சமைத்துப் பூசனை செய்ய விரும்பினான். அவன் மனைவி இளங்கோவெண்மாளும் கணவன் கருத்துக்கு இசைந்தனள். அரசன், குறித்த நாளில் தன் படைகளுடன் வடக்கு நோக்கிப் பிரயாணமாயினன்; முடிவில் உத்தர கோசலத்தை நெருங்கினான்.

அந்நாட்டரசர்கள் ஒன்று சேர்ந்து செங்குட்டுவனை எதிர்த்தனர். அவனோ, இரை தேடிச் செல்லும் சீயம் யானைக் கூட்டத்தைக் கண்டு பெருமகிழ்வுடன் பாய்ந்தாற்போலப் பகை அரசர்கள் மேற் பாய்ந்து பெரும்போர் இயற்றினன்; முடிவில் ஏதிலர் சேனையைச் சின்னபின்னமாக்கி, யாவரையும் கொன்று, பகையரசரான கனகன், விசையன் என்போரைச் சிறைப்படுத்தினான். எஞ்சிய பகைவர் பலவாறு வேடம் புனைந்து சிதறி ஓடினர். பின்னர்ச் செங்குட்டுவன் தன் தானைத் தலைவனைச் சிலருடன் அனுப்பி, இமயத்தினின்றும், சிலையைக் கொண்டுவரச் செய்தான்; சிலை கொண்டுவரப்பட்டதும் சேரன், தான் சிறைப்படுத்திய கனகவிசயர் முடிமீது அச்

சிலையை ஏற்றிக் கங்கையில் நீராட்டித் தூய்மை செய்வித்தான்; மீளவும் அவர்கள் முடிமீது வைத்தே தன் பரிவாரங்களோடு வஞ்சிமாநகரை அடைந்தான்.

மன்னன் வீரபத்தினிக்கு ஆலயங் கட்டுவித்து, தன் நாட்டில் சிறைப்பட்டோரை வெளியேற்றிச் சிறைக் கூடங்களைத் தூய்மை செய்வித்தான்; வஞ்சி மாநகரை எழில் பெற அலங்கரிக்கச் செய்தான். பத்தினிக் கடவுளின் விக்கிரகத்திற்கு அணிகளைப் பூட்டி அலங்கரித்துப் புட்பாஞ்சலி செய்து, திக்குத் தேவதைகளைக் கடைவாயிலில் ஸ்தாபித்து, வேள்வி ஓமங்களும் விழாக்களும் குறைவறச் செய்தான். யாவரும் பத்தினிக் கடவுளைத் தொழுது நின்றனர். அவ்வமயம், வளைக்கைகளும் மேகலாபரணமும் வயிரத் தோடணிந்த செவிகளும் விளங்க, மின்னற்கொடி போலும் உருவமொன்று விசும்பில் தோன்றியது. அதனைக் கண்ட செங்குட்டுவன் முதலானோர் அதிசயமடைந்தனர்.

அவர்கட்குக் கண்ணகியாகிய தெய்வம் தன் மெய்யுருவம் காட்டி உரத்த குரலுடன்,

“தென்னவன் தீதிலன்; தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினான்; நானவன் தன்மகள்;
வென்வேலான் குன்றில்விளையாட்டு யானகலேன்
என்னொடுந் தோழியீர்! எல்லீரும் வம்மெல்லாம்”

என்றது

ஆண்டிருந்த மகளிர் யாவரும் அருட்பாடல்களால் அக்கடவுளைத் துதித்தனர். முடிவில் "சேரன் செங்குட்டுவன் நீடூழி வாழ்க" என்று அத் தெய்வம் அரசனை வாழ்த்தி மறைந்தது. அரசன் கண்ணகித் தெய்வத்திற்கு வேண்டிய பூசனை முதலியவற்றிற்குப் பல நிலங்களை விட்டு, ஏராளமான பொருளைக் கோயிலுக்கு அளித்தான். இங்ஙனமாகச் சேரர் பெருமான் தன் நாடு நோக்கி வந்த பத்தினிக் கடவுளைச் சிறப்பித்தான்.

இவன் பொதுவாக வைதிக மதத்தினன்; ஆயினும் திரிபுரமெரித்த விரிசடைப் பெம்மானின் அணுக்கத் தொண்டன்; தன் மதமே சிறந்ததென்றும் யாவரும் அதனையே பின்பற்ற வேண்டுமென்றும் இம்மன்னவன் தன் குடிகளை வற்புறுத்திலன்.

இவனது ஆட்சிக் காலத்தில், வஞ்சி மாநகரில் எல்லாச் சமயத்தவரும் தபமிற் கலந்து வாழ்ந்தனர். செந்தண்மை பூண்ட அந்தணர்களையும் அறவோர்களையும் ஆதரித்துவந்த சிறந்த வள்ளல் என்று செங்குட்டுவனைக் கூறுதல் மிகையாகாது.

வரையாது கொடுப்பதிலும் செங்குட்டுவன் நிகரற்றவன் என்றே பெயர் பெற்றான்; தமிழில் வல்லவரான புலவர் பெருமக்கள பலரை இவன் ஆதரித்து வந்தான். அவர்களில் மிக்க சிறபபுறறவர்கள் **சீத்தலைச் சாத்தனார், பரணர்** எனபோர் ஆவர். பரணர் செங்குட்டுவன் தந்தையான நெடுஞ்சேரலாதனால் ஆதரிக்கபபட்டவா; அவனுககுப் பின்னர்ச செங்குட்டுவனால் ஆதரிக்கப்

பட்டார். அவர், சேரன் செய்த போர்ச் செயல் களையும் பத்தினிக்கு ஆலயம் எடுப்பித்ததையும் அவன் குணாதிசயங்களையும் வைத்துப் பாட வேண்டும் என்று விரும்பினார்; தான் விரும்பிய வண்ணம் சேர நாட்டை அடைந்தார்; அடைந்து செங்குட்டுவனைக் கண்டார்.

## புலவர் ஐந்தாம் பத்தைப் பாடியது

தனது தந்தைக்கும் தனக்கும் உயிர்த் தோழ ராயும் பைந்தமிழ்ப் புலவராயும் விளங்கிய பரணரைக் கண்ட செங்குட்டுவன் முக மலர்ச்சி யோடு எதிர் சென்று வரவேற்று, அவருக்கு விருந் தளித்தான். புலவர் பெருமகிழ்ச்சி உற்றார்; அவன் அரும் பெருஞ் செயல்களையும் குண விசே டங்களையும் கூறிப் புகழ்ந்தார். அரசன் மன மகிழ்ந்தான். பின்னர்ப் பரணர் அவனைப் பற்றிப் பத்துப் பாடல்களைப் பாடினார். அப் பத்துப் பாடல்களும் **பதிற்றுப்பத்து** என்னும் சங்க நூலில் உள்ளன. அவற்றில், செங்குட்டுவன் வீரச் செயல்கள், குணாதிசயங்கள் முதலியன கூறப்பட் டுள்ளன. அவற்றில் பெரும்பாலான செங்குட்டு வன் என்ற தலையங்கத்தின்கீழ் முன்னமே வந் துள்ளன. எஞ்சியவற்றில் சிறப்பாக உள்ளன வற்றை ஈண்டுக் குறிப்போம்:

செங்குட்டுவன் பழையன் என்பானோடு நிகழ்த்திய பெரும் போரில், அவனது காவல் மர மாகிய வேம்பினைத் துண்டம் துண்டமாகத் தறிப்

பித்து, அப்பழையன் யானைகளையே கடாக்களாகப் பூட்டி, அவன் மகளிரது கூந்தலை அறுத்துத் திரித்து அதனையே கயிறாகவுங் கொண்டு வண்டியில் இழுப்பித்தனன் என்பது தெரிகிறது.

போரில் வெற்றிபெற்ற வீரர்கட்குச் செங்குட்டுவன், தான் கைக்கொண்ட பகையரசனின் பொருள்களை வழங்குவது வழக்கம் என்று பரணர் கூறியுள்ளார்; இங்ஙனமே, அவன் அப்பொருள்களைப் போர்க்களம் பாடும் புலவர்க்கும் மற்ற இரவலர்க்கும் வேண்டியவற்றை வேண்டியவாறே அளித்தனன் என்று பாடியுள்ளார்.

செங்குட்டுவன் முன்னோர் 'எழுமுடி' என்று பெயர் பெற்ற மாலை ஒன்று உடையராயிருந்தனர். சேரர், அரசர் எழுவரை வென்று, அவ்வெற்றிக்கு அறிகுறியாக அவரது ஏழு முடியாலும் செய்யப்பட்ட மாலையை அணிந்து வந்தனர். ஆதலின் அம்மாலை அப்பெயர் பெற்றது. அதனைச் செங்குட்டுவனும் அணிந்திருந்தான் என்று பரணர் பகர்ந்துள்ளார்.

செங்குட்டுவனின் இயற்கைக் குணங்கள் பலவற்றுள்ளும் அவனது வீரத்தன்மையே தலைசிறந்து விளங்கி இருந்ததென்பது, இளங்கோவடிகளும் பரணரும் அக்குணத்தையே பாராட்டிப் புகழ்தலால் அறியக் கிடக்கின்றது. பரணர் செங்குட்டுவனுக்குப் பிற வேட்கைகளை விடப் போர் வேட்கையே மிக்கிருந்ததென்று புகழ்ந்துள்ளார்.

சேரமன்னவன் இமயமலையையும் குமரியாற்றையும் வடக்கு, தெற்கு எல்லைகளாகக் கொண்ட நாடுகள் பலவற்றையும், அவற்றை ஆண்ட அரசர்களோடு பொருது அழித்தான் என்று புகன்றுள்ளார். பரணர் செங்குட்டுவனின் கொடையையும், அக்கொடைக்கு வருவாயாகிய பகைவரைக் கோறலையும் உடன் கூறிப் பாடியுள்ளார்.

இங்ஙனம் பத்துப் பாக்களால் தன்னைப் பாடி மகிழ்வித்த பரணரைச் செங்குட்டுவன் புகழ்ந்து, அவருக்குப் பரிசாக உம்பற் காட்டு வாரியத்தைக் கொடுத்து, தன் மகனும் இளவரசனுமான **குட்டுவஞ் சேரல்** என்பானுக்குக் கல்வி கற்பிக்குமாறு அவரிடமே அவனை அடைக்கலமாக விட்டனன். பரணர் பெரிதும் மகிழ்ந்து, அரசனுடனே அரண்மனையில் இருந்து கொண்டு, குட்டுவஞ் சேரலுக்குத் தமிழ்க் கல்வியினைக் குறைவறப் போதித்து வந்தார்; இடையிடையே தமது இனிய பாக்களால் செங்குட்டுவனைக் களிப்பித்து வந்தார்.

இவ்வாறு பெருந்தமிழ்ச் செல்வராய் விளங்கி மேம்பட்ட புகழோடு வாழ்ந்து, அரசர்கள் மதிக்கத் தக்க அறிவும் ஆற்றலும் அமையப்பெற்று, தமிழகத்துக்கே சிரோமணியாயிருந்த பரணர், முடிவில், நாமகள் வருந்த மண்ணகம் நீத்து விண்ணகம் புக்கனர்.

**புலவர் பாடிய பாக்கள்**

பரணர் பாடியனவாக நற்றிணை முதலிய சங்க நூல்களில் சுமார் எண்பது பாடல்கள் வரையில் கிடைத்துள்ளன. இவர் பாடிய பாடல்கள் ஒவ்வொன்றினும் தம் காலத்தவரைப் புகழாமலும் தம் காலத்து நிகழ்ச்சிகளில் ஒன்றைப் புகுத்தாமலும் பாடுவதில்லை என்பது இவர் பாடல்களை நன்கு ஆராய்வோருக்குத் தெள்ளிதின் விளங்கும்.

இவர் கொடைவள்ளல்களில் ஒருவனான 'வல்வில் ஓரி'யைப் புகழ்ந்து கூறியுள்ளார்: 'ஓரி என்பவன் வலிய வில்லை உடையவன்! அவனது காட்டில் உள்ள குமிழ மரத்தின் வளைந்த மூக்கினையுடைய முற்றிய கனிகள் கீழே உதிர்ந்து கிடக்கும். அவை இள்மானுக்கு வெறுப்பில்லாது உணவாக நிற்கும்."

புலவர், கொல்லிமலையில் அமைந்த **கொல்லிப் பாவை**யின் தோற்றமும் அதன் இயல்பும் ஆங்காங்கு உவமை முகத்தாற் கூறியுள்ளார்: 'கொல்லிமலைச் சாரல் தெய்வத்தாற் பாதுகாக்கப்பட்டு வருகின்ற தீது தீர்ந்த நெடிய கொடு முடியையும் அழகிய வெள்ளிய அருவியையும் உடையது. அச்சாரலில் காற்று மோதி அப்பினும், வலிய மழை விரைந்து வீசினும், சினங் கொண்டு இடிமுழங்கி மோதினும், இவையே அன்றி வேறு பல ஊறுபாடுகள் தோன்றினும், பெரிய இவ்வுலகமே சினங்கொண்டு எதிர்ப்பினும், தன் அழகிய நல்ல வடிவங்கெடாத

இயல்பினையுடைய **பாவை** போல—இளமகள் என்னெஞ்சினின்றும் நீங்காள்' எனத் தலைவன் தலைவியைப் பற்றிக் கூறுமுகத்தால் கொல்லிப் பாவையை உவமித்தார்.

புலவர், கொண்கானத்து முன்பிருந்த 'நன்னன்' என்னும் சிற்றரசனது கொடை முதலியனவும், அவன் கொடுஞ்செயல்களும், அவனோடு சேரமான் போர்செய்ததும், சேரன் சேனாபதி ஆய்எயினனை நன்னன் சேனாபதி 'மிஞிலி' என்பான் கொன்றதும் பிறவும், நன்னனது பாழியில் பொருள் சேமித்துக் காவலோம்பியதும் விரித்துக் கூறியுள்ளார்.

"பிண்டன்" முதலிய பகையரசர் அழகு பொருந்திய பிரிந்த பிடரிமயிரையும் விரைந்த செலவினையும் உடைய நல்லகுதிரைப் படைகளை உடையவர்கள். அவர்களை வேற்படையை உடைய நன்னன், போரிலே தோற்றோடச் செய்தான்.

அவ்வரசர்களின் உரிமை மகளிரைப் பற்றி வந்து அவர் தலையை அழித்து, அக்கூந்தலைக் கயிறாகத் திரித்து, அக்கயிற்றினாலே அப்பகைவரின் சேனையைப் பிணித்தனன்" என்று கூறுவதன் மூலம் நன்னனின் கொடுஞ் செயலைப் பரணர் படம் பிடித்துக் காட்டுகின்றார்; இங்ஙனமே ஒவ்வொரு பாட்டிலும் பிற செய்திகளைக் குறித்துச் செல்கின்றார். பரணர் வெளியன் தித்தனது கானலம் பெருந்துறையும், பிண்டன் தோல்வியும், நள்ளியின் சோலைச் சிறப்பும், ஆய்—

கானகத்துச் சிறப்புங் கூறியுள்ளார்: அதிகன் என்னும் சிற்றரசனின் 'வேங்கை மலை'யைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவர், சோழன்-கரிகாற் பெருவளத்தான் மகள் 'ஆதிமந்தி' என்பாள் தன் காதலனை இழந்து புலம்பிய கதையை விரித்தும் சுருக்கியும் உவமமாக்கியும் பல இடங்களில் கூறியுள்ளார்; அதிகமான் நெடுமானஞ்சி திருக்கோவலூரை வென்றதனைப் பாராட்டிக் கூறியுள்ளார். இவர், இங்ஙனமே பலரையும் புகழ்ந்து, அரிய சொற்பொருள் நயங்களை வைத்து அழகுறப் பாடிப் போந்தார்

இத்துணை அரசர்கள், சிற்றரசர்கள் முதலியோர் பெயர்கள் இவருடைய பாடல்களில் இடம் பெற்றுள்ளமையால் இவர், அவர்களை நேரிற் கண்டும், கேள்வியுற்றும் அறிந்தவர் என்பது தெரிகிறது. பல தலங்களைட் பற்றிக் கூறுவதில் இருந்து இயற்கைப் பேரழகில் ஈடுபட்ட பெரியார் இவர் என்பது அறியக் கிடக்கிறது. நீங்கள் புறநானூறு முதலிய சங்க நூல்களை வாசித்துப் பரணர் போன்ற பண்டைப் புலவர் பெருமக்களின் வரலாறுகளையும், நம் தமிழ்நாட்டு அக்காலத்திய நிலைமை, நாகரிகம் இன்ன பிறவற்றையும் அறிதல் வேண்டும். தமிழராகிய நாம் நமது வரலாற்றை அன்றோ முன்னர் அறிதல் வேண்டும்!

# நக்கீரர்

## பிறப்பும் வளர்ப்பும்

பாண்டிய நாடென்பது மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி மாவட்டங்களும் கீழ்க்கரைப் பிரதேசமும் சேர்ந்த நிலப்பரப்பாகும். அதனைப் படைப்புக் காலந்தொட்டே மேம்பட்டு வந்த பழங் குடியினரான 'பாண்டியர்' என்னும் அரசர்கள் ஆண்டு வந்தார்கள். பாண்டிய நாட்டில் சிறப் புற்ற மலை 'பொதியம்' சிறப்புற்ற நதி 'வையை; தலைநகர் மதுரை. அந்நகர் பீடுமிக்க மாடங்களை யுடைய பழம்பதியாகும். தமிழ் மொழியைப் பரப்புவான் வேண்டி ஆலவாய்ப் பெம்மானும் செவ்வேளும் உட்பட மாபெரும் புலவர்கள் சங்க மிருந்து தமிழாராய்ச்சி செய்தது அம்மதுரை யிற்றான்.

வற்றாத வளம் பெற்ற வையைப் பேராற்றின் கரையில் இன்றும் தன் பண்டைப் பெருமை குறை யாது சிறப்புற விளங்கும் அம்மாநகரில், கடைச் சங்கமிருந்த காலத்தில் பைந்தமிழ்ப் புலவர் ஒருவர்

இருந்தார். அவர் ஆசிரியர் என்ற முறையில் பலருக்குக் கல்வி போதித்தமையின் **கணக்காயர்** என வழங்கப் பெற்றார். அவர் செய்த நற்றவமே உருவெடுத்தாற் போன்றும். தமிழ்த்தாயின் செல்வக் குழந்தை என எக்காலத்தவரும் புகழத் தக்கவாறும், தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனப்பெயர் பெற்று ஒல்காப்புலமையோடு வாழப் பிறந்தவர் என யாவரும் புகழ்ந்து கூறத்தக்க வாறும், குமாரர் ஒருவர் அவருக்குப் பிறந்தார். **கீரன்** என்பது அவரது இயற்பெயர். அவர் பெரும் புலவராய்த் திகழ்ந்த காலத்து அறிஞர் பலர், சிறப்புப் பொருளை உணர்த்தும் இடைச்சொல் லாகிய '**ந**' என்பதனையும் '**ஆர்**' விகுதியையும் அவரது பெயரோடு சேர்த்து '**நக்கீரனார்**' என அழைப்பாராயினர்.

அவர், தக்க வயதடைந்து தமிழ்ப் புலமை குறைவறப் பெற்றவுடன் மதுரையில் நடந்துவந்த கடைச் சங்கத்துப் புலவருள் ஒருவராகச் சேர்ந் தார். பின்னர், நாள் செல்ல, செல்ல அவரது பேராற்றலைக் கண்டு வியந்த புலவர்கள் அவரைத் தங்கள் நலைமைப் புலவராக ஏற்றுப் போற்றி னார்கள், நக்கீரருடன் நாற்பெதான்பது புலவர்கள் கடைச் சங்கத்தில் இருந்து தமிழராய்ந்தனர் என்பர்.

> ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தாமே மந்தியம் என்ப.''
>
> — தொல்காப்பியம்-

## நக்கீரரும் குயக் கொண்டானும்

நக்கீரர் மதுரையில் வாழுநாளில் '**கொண்டான்**' என்ற பெயருடைய குயவன் ஒருவன் இருந்தான். அவன் ஆரிய மொழியில் பெரும் புலமை எய்தினவன்; மிக்க செருக்குற்றவன்; தன்னே ரில்லாத் தலைவன் என்று தன்னை நினைத்துக் கொண்டவன். அவன் எப்போதும் தமிழ் மொழியினை இழித்துக் கூறுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தான். அவன் வன்மை யுற்றவன் என்று எண்ணிய மக்கள் பலர் அவன் அகந்தையை அடக்க வன்மையற்று இருந்தனர்.

அவன் ஒரு நாள் 'பட்டி மண்டபம்' ஏறி, "வட மொழி மிக்க சிறப்புடையது; தமிழ் அத்துணைச் சிறப்புடையதன்று" என்று தமிழை இழித்துக் கூறினன். அப்போது அவ்வழியே சென்ற நக்கீரனார், "வடமொழியே தமிழைச் சிறப்புடைய மொழியென ஒப்புக் கொள்ளுகின்றது; தமிழை இகழ்ந்துரைத்த நின்னை வடமொழியாலே இறக்கு மாறு கூறுகிறேன்; அது நின்னை இறக்கச் செய்யா தாயின், தமிழ் இழிந்ததே என்று கொள்கை" என்று கூறி.

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி!
பரண கபிலரும் வாழி!—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக்
குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்க்சுவா கா"

என்று பாடினார்.

பகுதியை நன்மாறன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் 'இலவந்திகைப் பள்ளி'யில் துஞ்சியமையின் பிற்காலத்தே 'இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்' என வழங்கப் பெற்றான்.

அம் மன்னன் அக்காலத்திருந்த முடியுடை மூவேந்தரினும் சிறப்புற்று விளங்கினான்; தமிழுக்குத் தாய் போன்றவன்; அரசற்குரிய உத்தம இலக்கணங்களைப் பெற்றவன்; செங்கோலன்; தண்ணளியன். அவனது அரண்மனை இரவலர்க்குத் தாய் வீடு போன்று இருந்தது.

பாண்டியன் வருவார்க்கும் போவோர்க்கும் வரையின்றிக் கொடுத்துவந்தமை, தமிழ் நாடெங்கும் பரவியது. பல பெரும் புலவர்கள் அவனைப் பாடிப் பரிசில் பெற்று ஏகினர். அவனிடம் சென்ற புலவர்கள் அவன் நற்குணங்களை வியந்து பாடினர். இவ்வாறு சென்று பாண்டியன் நட்பைப் பெற்ற புலவர்கள் 'மதுரை-மருதன் இளநாகனார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், வடம வண்ணக்கன் பெரிய சாத்தனார்' என்போர் ஆவார்.

நன்மாறனைச் சென்று காண நக்கீரர் விருப்பங் கொண்டார்; விரும்பிய விதமே கண்டார். அவர் அருமை பெருமைகளை நன்குணர்ந்த பாண்டியன், அவரை வரவேற்று நல் விருந்து அளித்தான். புலவர் பெரிதும் மனமகிழ்ந்தார்.

அவர் தமது மகிழ்ச்சி தோன்ற அரசனைப் புக பவராய்,

"சிவபிரான், ஆனேற்றை வெற்றியாக உயர்த் தியவன்; அழல்போலும் விளங்கிய சடையினை உடையவன். நீல மணி போலும் திருமிடற்றை உடையவன். பலராமன், கடற் கண்ணே வளரும் சங்கை ஒக்கும் திருநிறத்தை உடையவன். கொலையை விரும்பும் கலப்பையை ஆயுதமாகக் கொண்டவன்; பனைக் கொடியை உடையவன், திருமால், கழுவப்பட்ட அழகிய நீலமணி போலும் திருமேனி உடையான்; வானுற ஓங்கிய கருடக் கொடியை உடையவன்; வென்றியை விரும்பு வோன் செவ்வேள், நீலமணி போலும் நிறத்தை யுடைய மயிற் கொடியை எடுத்தவன்; மாறாத வெற்றியை உடைய அம்மயிலாகிய ஊர்தியை உடையவன். இதுவரை கூறப்பட்ட நால்வரும் உலகத்தைப் பாதுகாப்பவர்; முடிவுக்காலத்தைச் செய்யும் வலியினையும் தோல்வியில்லாத நல்ல புகழினையும் உடையவர். இவர்களுள், நீ விலக்கு தற்கரிய வெகுட்சியாற் சிவபிரானை ஒப்பை; வலியாற் பலராமனை ஒப்பை; புகழாற் பகைவ ரைக் கொல்லும் மாயோனை ஒப்பை; கருதியது முடித்தலான் முருகனை ஒப்பை; இவ்வாறு அவ் வவரை ஒத்தலான், நினக்கு எவ்விடத்தும் அரியனவும் உளவோ?

ஆதலால், இரப்போர்க்குப் பெறுதற்கரிய அணி கலங்களைப் பெரிதும் வழங்கி, யவனர் நல்ல

குப்புயிற் கொண்டு வரப்பட்ட குளிர்ந்த நறுநாற்றத்தை உடைய தேறலைப் பொன்னாற் செய்யப்பட்ட புனைந்த கலத்தின் கண்ணே ஏந்தி, நாடோறும் ஒள்ளிய வளையையுடைய மகளிர் ஊட்ட, மகிழ்ச்சி மிக்கு இனிதாக நடப்பாயாக. வென்றியால் உயர்ந்த வளையுடைய மாற! அழகிய இடத்தையுடைய வானத்தின்கண்ணே நிறைந்த இருளைப் போக்கும் வெய்ய கதிரையுடைய ஞாயிற்றை ஒப்பவும் மேலைத் திக்கில் தோன்றும் குளிர்ந்த கதிரையுடைய பிறையைப் போலவும் இவ்வுலகத்தோடு கூட நின்று நிலை பெறுவாயாக.''

என்று பொருள் படத்தக்க அரும்பா ஒன்றினைத் திறம்படப் பாடி வியந்தார்; பின்னர் அவர், 'தெளிந்த நீராற் சூழப்பட்ட உலக முழுவதையும் பிற வேந்தர்க்குப் பொதுவாதலின்றித் தமக்கே உரித்தாக ஆண்டு வெண்கொற்றக் குடையால் நிழற் செய்த ஒரு தன்மையை உடையோர்க்கும், இடையாமத்தும் நண்பகலும் துயிலானாய் விரைந்த செலவையுடைய விலங்குகளைப் படுக்கக் கருதிச் செல்லும் கல்வியில்லாத ஒருவனுக்கும் உண்ணப்படும் பொருள் நாழி; உடுக்கப்படுபவை இரண்டே; பிற எல்லாம் ஒக்குமாதலால் செல்வத்தாற் பெறும் பயனாவது கொடுத்தல்; 'செல்வத்தை யாமே நுகர்வேம்' என்று கருதின், தவறுவன பல''—என்ற பொருளை அமைத்துச் சிறந்த பாடலைப் பாடினர்.

இவ்வாறு நக்கீரர் திறம்படப் பாடிய பாக்கள் பாண்டியனை மகிழச் செய்தன; அவ்வன் நக்கீரரின் தலைமைப் பெருக்கையும் பரந்த சிந்தையையும் விரிந்த நோக்கத்தையும் நன்குணர்ந்தான்; அக மலர முகமலர்ந்தான்; தன்னோடு நக்கீரரை உடன் உண்ணச் செய்து, அவர் மனம் மகிழுமாறு பரிசில் பல நல்கினான். புலவர் அரசனது தளராக் கொடைத் திறத்தை வியந்து கொண்டாடி அவனைப் பலவாறு வாழ்த்தி விடைபெற்றுச் சென்றார். என்னே நக்கீரர் பெற்ற பெருமை!

**களவியலுக்கு உரை கண்டமை**

மதுரையிற் கோவலன் கொலையுண்டதும், பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்ததும், மதுரை எரியுண்டதும் ஆய இந்நிகழ்ச்சிகட்குப் பின்னர் **இளஞ்செழியன்** பட்டம் எய்தினன். அக்காலத்து வானமும் பொய்த்து வற்கடமும் மிக்கது. அதனால், தமிழ்ச் சங்கம் நடைபெறவில்லை. அரசன் புலவர்களைக் கூவியழைத்து, 'வாருங்கள்; நமது நாட்டில் பஞ்சம் அதிகரித்ததால், யான் உங்களைக் காப்பாற்ற இயலாத நிலையில் உள்ளேன். நாடு வற்கடத்தாற் பெரிதும் அல்லலுறு கின்றது. ஆதலின் உங்களுக்குப் பிரியமான இடங் களுக்குச் சென்று பஞ்சம் நீங்கிய பின்னர் நாட்டைக" என்றான்.

புலவர்கள் அதற்கிசைந்து வேறு நாடுகளிற் புக்கனர். நாட்கள் கழிந்தன; மாதங்கள்

மறைந்தன; ஆண்டுகள் சென்றன. பின்பு நாடு மலிய மழை பெய்தது; வளஞ்சிறந்தது; வற்கடமும் தொலைந்தது. அப்போது அரசன் "நூல் வல்லாரைக் கொணர்க" என ஏவலரை எப்பக்கமும் ஏவினன். அவர்கள் எண்டிசைகளிலும் சுற்றித் திரிந்து, "அரசே! எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தேடிக் கொணர்ந்தோம். ஆயின், பொருளதிகாரம் வல்லாரைக் காண்கிலேம்" என்று கூறினர்.

ஏவலர் கூற்றைக் கேட்ட காவலன் பெரிதும் மனங் கவன்று "என்னை! எழுத்தும், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறவில்லையாயின் இவை பெற்றும் பயனில்லையே! என் செய்வோம்!" என்று கூறி ஏங்கி நின்றான்.

அரசன் கவல்வதை உணர்ந்த அவிர்சடை அண்ணல், "என்ன! அரசன் பொருளதிகாரம் பெறவில்லை எனக் கவல்கின்றான்! பாவம் அவனது மனக்குறையை யாம் தீர்ப்போம்" என்று தமக்குள் கூறிக்கொண்டு, அறுபது சூத்திரங்களைச் செய்து மூன்று செப்பேடுகளில் எழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

வழக்கம் போலக் கோயிலைச் சுத்தம்செய்பவன் அவண் போந்து கோயிலைத் துடைத்துச் சுத்தி செய்தான். பின்னர், என்றும் பீடத்தின் கீழ் அலகிட்டறியாதவன், தெய்வத் திருவருளால் அன்று பீடத்தின்கீழ் அலகிட்டான் இடவே, அதன்

கீழிருந்த மூன்று செப்பேடுகள் வெளிப் போந்தன. அவன் அவற்றைப் பார்க்க, அவை பொருளதிகாரச் சூத்திரங்களையுடையனவாகக் கண்டான்; களி பேருவகை கொண்டான்.

'அரசன் பொருளதிகாரம் கிடைக்கவில்லை என்று கவல்வதை உணர்ந்து கண்ணுதலான் செய்த திருவிளையாடல் போலும் இது! என்னே எம்பெருமான் தடங்கருணைத் திறம் இருந்தவாறு!'' என்று வியந்து, அரண்மனை வாயிலை அடைந்தான்.

அடைந்தவன் அரண்மனைக் காவலரிடம் தான் வந்த செய்தியை அறிவித்தான்; அவர்களும் அரசனிடம் அந்தணன் செய்தியைத் தெரிவித்தனர். அரசன் அந்தணாளனை அருகழைக்க, அவனும் மன்னனையடைந்து. செப்பேடுகளைக் காட்டினான். அரையன் மனமகிழ்ந்து, சொக்கேசன் நமது மனக்குறையை மாற்றச் செய்த சூத்திரங்கள் இவை. என்னே எம்பெருமானின் கருணை!'' என வியந்து, பெருமான் கோயில் கொண்ட திக்கை நோக்கித் தெண்டனிட்டான். பின்னர், அரசர் பெருமான் சங்கப் புலவர்களைக் கூவியழைத்து, "எம் கருணைக் கடல் அருளிய இப் பொருளதிகாரத்தினைச் சங்கத்திருந்து ஆராய்ந்து பொருள் காண்மின்'' என்றான்.

புலவர்கள் செப்பேடுகளுடன் சங்கத்தை அடைந்து, கல்மாப் பலகையேறி ஆராய்ந்தனர்.

ஒவ்வொரு புலவர் ஒவ்வொரு விதம் சூத்திரங் கட்குப் பொருள் உரைத்தனர். அவர்கள் தாம் கூறிய உரையே சிறந்ததென்று கூத்தாடினர். எனவே உண்மையான பொருள் இதுதானென ஒருவராலும் உறுதியாகக் கூற முடியவில்லை. இங்ஙனம் பல நாட்கள் கழிய, புலவர்கள் ஒன்று கூடி "நாம் எத்துணை ஆராயினும் உண்மைப் பொருள் விளங்கியவாறில்லை. நாம் நமதரசனிடம் சென்று, நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டு மென்று கேட்டு, அவனைப் பெற்று, அவனால் இதற்கு உண்மை உரையைக் காண்போம்" என்று தீர்மானித்தவராய், அரசனை அடைந்தனர்.

அரசன் புலவரைக் கண்ணுற்றதும், "என்ன! பொருளதிகாரத்திறகு உரை கண்டீர்களோ?" என வின்வினன். புலவர்கள், "அரசே! எங்கள் உரையில் உண்மை இதுவெனப் புலப்படாது தயங்குகின் றோம். எங்கட்குக் காரணிகன் ஒருவனைத் தருக!" என்றனர். மன்னன் மனங்கவன்று, "புலவீர்! என்னே! யான் எங்குச் சென்று காரணிகனைக் கொணர்வேன்!" என்று கூறி ஏங்கினன். அரசன் பின்னர்ப் புலவரை நோக்கி, 'நீயிர் நாற்பத் தொன்பதின்மர் பெரும் புலமை நிறைந்தவர்களா யிற்றே. உமக்குக் காரணிகனும் வேண்டுமோ? யான் என் செய்வேன்!" என்றனன்; என்றாலும், புலவர்கள், "சூத்திரங்களைச் செய்தவன் ஆல வாய்ப் பெம்மானன்றோ! அவனையே காரணி கனைத் தரும்படி வேண்டுதும்" என்று கோயிலிற் சென்று வரங்கிடந்தனர்.

இடையாமத்திலே சொக்கேசர் அசரீரியாக "இவ்வூர் உப்பூரிகுடி கிழார் மகன் **உருத்திர சன்மன்** என்ற ஒருவன் உளன். அவன் பைங்கண்ணன்; புன் மயிரன்; ஐயாட்டைப் பிராயத்தான் அப்பிள்ளை மூங்கையன். அவன் குமாரக் கடவுள்; ஒரு சாபத்தால் அவன் இங்குத் தோன்றினன். அவனைக் கொணர்ந்து சங்க ஆசனமேலிருத்திக் கீழிருந்து, சூத்திரப் பொருளை உரைத்தல் வேண்டும். உண்மையான பொருளாயிருப்பின், கண்ணீர் விடுவன்; மெய்ம்மயிர் சிலிர்க்கும்; உண்மையற்ற உரையைக் கேட்கும்போது வாளா இருப்பான். இங்ஙனம் செய்யின் உண்மையான பொருளுரை கிடைக்கும்" என்று மும்முறை கூறி அருளினார்.

புலவர்கள் உப்பூரிகுடி கிழார் மனையை அடைந்து, ஈசன் திருவுள்ளத்தை அவரிடம் கூறி உருத்திரசன்மனை வேண்டி அழைத்து வந்து, ஆசனத்திருத்தி, மங்கலமாகிய நல்லாடை, நற் சாந்து, நற்பூ அணிவித்தனர். பின்னர் ஒவ்வொரு புலவராக ஆசனத்தின் கீழ் அமர்ந்து பொருள் உரைத்தார், உருத்திர சன்மன் வாளாவிருந்தனன். பின்னர், 'மதுரை மருதனிள நாகனார்' உரை கூறினர். அவ்வுரையைக் கேட்ட உருத்திர சன்மன் ஒரோவிடத்துக் கண்ணீர் விட்டு மெய்ம்மயிர் சிலிர்த்து இனிது வீற்றிருந்தனன்.

பின்னர், கணக்காயனார் மகனார் நக்கீரனார் பொருள் தெற்றெனப் புலனாகும்படி உரைப்ப, உருத்திர சன்மன், பதந்தோறும் கண்ணீர் விட்டு

மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். உரையும் கூறி முடிந்தது. புலவர்கள் யாவரும் 'மெய்யுரை உரைத்தவர் நக்கீரனாரே' எனப் போற்றினர்.

மன்னர் மனக்கவலை ஒழிந்தது; உண்மைப் பொருள் உரைத்த நக்கீரரை அரசன் பெருமை செய்தான்; நடுநிலை வகித்து உண்மையை விளங்கச் செய்த உருத்திர சன்மனைப் போற்றி, அவனை அவனது இல்லத்திற் சேர்த்தனன்.

இங்ஙனமாக, நல்லிசைப் புலவராய நக்கீரர், இறையனார் இயற்றிய களவியலுக்கு மெய்யுரை கண்டு பொய்யாப் புகழ் பெற்றார்.

### நக்கீரரும் செரக்கேசரும்

மதுரை மாநகரில் அரசு செலுத்தி வந்த பாண்டிய மன்னவன் நற்குண நல்லொழுக்கம் வாய்ந்தவன். அவன் சிறந்த சிவபக்தன். ஆலவாய்ப் பெம்மானடிகட்குத் திருநந்தனம் ஒன்றை உண்டாக்கி, ஒவ்வொரு நாளும் சண்பக மலர்களால் மாலை கட்டி, அப்பெருமானுக்குச் சாத்திப் போற்றி வந்தனன். அதனால் அவன் **'சண்பக மாறன்'** எனவும் வழங்கப்பட்டான்.

அவன் அடிக்கடி தன் மாதேவியுடன் இளமரக் காவுக்குச் சாயங்கால வேளையிற் செல்வது வழக்கம். அவ்விள மரக்காவில் அழகிய செய்குன்று ஒன்று உண்டு. அதன்மீது அரசனும் அரசியும் வீற்றிருத்தல் வழக்கம். ஒருநாள் மன்னன் மாதேவி

யோடு புறப்பட்டுச் செய்குன்றின்மீது தங்கி, தென்றலில் திளைத்திருந்தான். அப்போது அங்கு அரிய நறுமணம் ஒன்று வெளிப்போந்து உலவியது. அம்மணம் யாண்டிருந்து வெளிப்போந்தது என்று நினைத்துச் சுற்றிப் பார்த்தான்; பார்க்கையில், தன் மனைவியின் கூந்தலினின்றே அந்நறுமணம் வருவதாக உணர்ந்தான்; உணர்ந்ததும், "இவள் கூந்தலில் உண்டாய இம்மணம், இவளது கூந்தற்கு இயற்கையில் உளதோ? அன்றிச் செயற்கையில் உளதாயிற்றே? இவ்வுண்மையை அறிவேன்" என்று உறுதி செய்து கொண்டான்.

பின்னர், மன்னன் அரண்மனையை அடைந்து, 'என் உள்ளத்துளாய ஐயத்தைத் தவிர்க்க வல்லார் இப்பரிசினைப் பெறுக" என்று, ஆயிரம் பொன்னடங்கிய கிழி ஒன்றினைச் சங்க மண்டப முன்னர்க் கட்டுவித்தான். சங்கப் புலவர்கள் அரசன் கருத்தை அறியமாட்டாராய் வாளா இருந்தனர். இங்ஙனம் சில நாட்கள் கழிந்தன.

அக்காலத்து, ஆலவாய்ப் பெம்மானைப் பூசனை செய்து வழிபாடாற்றும் **தருமி** என்னும் அந்தணன் ஒருவன் அரசன் கட்டிய பொற் கிழியைப் பெற விரும்பினன். அவன் அண்ணலை நோக்கி, "சொக்கேசா! அரசன் தனது ஐயத்தை நீக்குவோர்க்குப் பொற்கிழி ஒன்றைத் தருவதாகச் சங்கமண்டபத்தின் முன் தூக்குவித்துள்ளான். அடியேன் நின்னையன்றி வேறொருவரையும் துணையாகக் கொண்டவனல்லன். நான் நற்குல

நங்கை ஒருத்தியை நாடி மணந்துகொள்ள விரும்புகின்றேன். அரசன் கருத்தை உணர்த்தி ஐயத்தைப் போக்கும் செய்யுள் ஒன்றினை எனக்குத் தருவாயாயின், அப் பொருளைப் பெற்றுக் கடிமணம் செய்து வாழ்வேன். என் விருப்பத்தை நிறைவேற்றுக'' என்று வேண்டி நின்றான்.

அவ்வமயம் அடியார்க்கு எளிய இறைவன் அகமகிழ்ந்து, தருமியின் துயரைப் போக்க முன் வந்து "பூந்தேனை ஆராயும் வாழ்க்கையோடு கூடிய அழகிய சிறகையுடைய வண்டே! இச்சகம் பேசாது நீ (உண்மையாய்க்) கண்டறிந்ததைச் சொல்; நெருங்குதல் பொருந்திய நட்பினையும் மயிலனைய சாயலையும், நெருங்கிய பற்களையும் உடைய இவ்வரிவையின் கூந்தலைப்போல நறுமணமுள்ள பூக்கள் எவையேனும் உளவோ நீ அறிந்த பூக்களில்?'' என்ற பொருளை அமைத்து, உளவிய பாடல் ஒன்றினை இயற்றித் தந்தனர்.

தருமி பெருவியப்புடன் அதனைப் பெற்றுச் சங்கப் புலவர்களிடங் காட்டினன். புலவர்கள் அச் செய்யுளின் விழுமிய சொற்சுவை பொருட்சுவையைக் கண்டு, பேரானந்தமுற்று, அரசனை அண்மி அவனுக்குப் பொருள் கூறினர். செய்யுளின் பொருள் நயத்தில் ஈடுபட்ட மன்னவன் மனமகிழ்ந்து, "என் ஐயம் ஒழிந்தது; தருமி பொற்கிழி பெறுக'' என்று கூறி விட்டனன்.

அந்தணாளன் உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகை கடல் போல்

பொங்க அகமலர முகம் மலர்ந்தான்; புலவர் களோடு சென்று பொற்கிழியை அறுக்க முயன் றான். அவ்வமயம் அவ்வழியே போந்த நக்கீரர் அவனைத் தடுத்து, அவன் கொணர்ந்த செய்யுளை படித்து, "அது பொருட்குற்ற முடையது; நீ பொற் கிழி பெற அருகனல்லை; செல்க" எனச் செப்பி விட்டனர். பாவம்! தருமி என் செய்வான்! 'கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே!' என்று ஏங்கிச் சொக்கேசர் சந்நிதியை அடைந்தான்; அடைந்து, "பெரும! நினது கொழுவிய பாடலுக் குத் தலைமைப் புலவனாம் நக்கீரன் குற்றங் கூறினான். இதனை என்னென்பது! நீ எழுதிய கவிக்கே இங்ஙனம் குற்றங் காண்பானாயின், வேறு யார் எழுதினும் அது குற்றமுடையதென்று அவன் கூறத் தடை யாது? நீ சென்று அவனை வாதில் வென்று உனது பெருமையை நிலை நாட்டாது ஒழிவையேல், உன்னை மதிப்பார் ஒருவரும் இரார்" என்று கூறிப் போந்தான்.

செஞ்சடைக் கடவுள் சினங் கொண்டான். உடனே புலவர் கோலத்துடன் தன் கோயிலை விட்டுப் புறப்பட்டுச் சங்க மண்டபத்தை அடைந்த னன். அடைந்து ஆண்டிருந்த புலவர்களை நோக்கி "எமது கவிக்குக் குற்றங் கூறியவர் யாவர்?" என்ற னன். நக்கீரர், "யானே உமது கவிக்குக் குற்றங் கூறியவன்" என்றார். "குற்றம் யாது?" என்று அண்ணல் வினவினான். நக்கீரர், "கூந்தற்கு இயற்கையில் மணமில்லை; செயற்கையால் மண

முண்டு. நீர் கூந்தற்கு இயற்கையில் மணம் உண்டு என்று உமது கவியில் குறிப்பிட்டு இருந்தீர். அத னால், அது பொருட் குற்றமுடைத்து" என்றார்.

அப்போது அழல்நிறக் கடவுள், "நன்று, பத்தினிப் பெண்டிர் கூந்தற்கும் தேவமாதர் கூந் தற்கும் இயற்கையில் மணமில்லையோ?" என்றார். நக்கீரனார் "அவற்றிற்கும் இயற்கையில் மண மில்லை" என விடை யிறுத்தார். சிவபிரான் மேலும் புலவரை நோக்கி, "நீ வழிபடும் சிவபிரான் பாகத்தமர்ந்த ஞானப் பூங்கோதையின் கூந்தற் கும் இயற்கையில் மணமில்லையோ?" என்று வினவ "ஆம்; அதற்கும் இயற்கையில் மணமில்லை" என்று சிறிதேனும் அஞ்சாராய்ப் புலவர் பெருமான் விடை பகர்ந்தார்.

பார்த்தான் பரமன்; நக்கீரர் பிடிவாதக்கார ராயிருப்பதைக் கண்டு வருந்தி, தன்னை இன்னான் என்பதை அவர் அறிந்து கொள்ளட்டுமென்று, எரி விழியைச் சிறிதே காட்டினன். அதற்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த நக்கீரர், "உமது அங்கமெல்லாம் எரி விழியாயினும் உமது கவி குற்றம் குற்றமே" என்று, தாம் கொண்ட கொள்கையையே சாதித் தார். சிவபெருமான் பொறுக்க மாட்டாதவனாய் நக்கீரரை நோக்கி, "ஐயா! நீ உமையின் கூந்தலை இழித்துரைத்தமையின் இம்மையிற் குட்ட நோயுற்று அலைக" எனச் சபித்தனன்.

சாபத்தைக் கேட்டதும் நக்கீரர் நடுநடுங்கி! பெருமான் கழலடிகளில் வீழ்ந்து, "ஐயனே,

அன்பற்கு மெய்யனே! நாயேன் அறியாதுரைத்த அபசார வார்த்தையைப் பொருட்படுத்தாது அடியேனை ஆட்கொள்ளல் வேண்டும்" என்று வேண்டினர். கருணையங் கடலான இறைவன் சீற்றந் தணிந்து, "கைலை காண்; இந்நோய் நின்னைவிட்டு அகலும்" என்று கூறி மறைந்தனன்.

நக்கீரர் உடனே குட்ட நோயால் வாட லானார். அவர் கொண்ட வருத்தம் கூறற்பால தன்று. அப்புலவர் பெருமான் மனங் கவன்று, "யான் கைலை கண்டு இந்நோயை ஒழிப்பேன்" என்று துணிவுகொண்டு, புலவர்களை நோக்கி, "உங்களோடு இருந்து இனிதே காலங் கழிக்கப் பேறு பெறாத பாவியேனை மறந்துவிடுமின்" என்று கூறினார். அவர்கள் அவரை மார்புறத் தழுவி, கண்களில் அருவிபோன்று நீர் சொரிய அவருக்கு விடையீந்தனர்.

**நக்கீரர் சிவப் பிழம்பாதல்**

பின்னர், நக்கீரர் மதுரையை விட்டுப் பிரிய மனமற்றவராகி வருந்தி. "இனி மீண்டும் மதுரையை எப்பொழுது காண்போம்! சங்கப் புலவர்களை எப்பொழுது காணப் போகிறோம்! சொக்கேசன் திருவடித் தாமரைகளைக் காண்ப தெப்போது? பல புகழ் நிறுவிய பாண்டிய மன்ன னைக் காண்பதெக்காலம்? நம்மை அவர்கள் மறந்து விடுவார்களோ? நமது பெயர் இனி மதுரை யில் நிலைபெற்றிருக்க முடியுமோ? அந்தோ! என் செய்வோம்! எனப் பலவாறு எண்ணமிட்ட

வராய், மதுரையை அரிதின் நீங்கி வடக்கு நோக்கிச் சென்றார்; வழியில் பல தளிகளைக் கண்டு தரிசனை செய்தார்; பல நாட்கள் வழி நடந்து இமய வெற்பின் சாரலை அடைந்தார்.

அடைந்தவர், அங்கோர் ஆலவிருட்சத்தையும் நன்னீர்ப் பொய்கையையும் கண்டார்; கண்டு, உள்ளங் குளிர்ந்தவராய் அக்குளத்தின் கரையில் அமர்ந்து நிட்டையில் இருந்தனர். அவ்வமயம், ஆல விருட்சத்தின் இலை ஒன்று நீரினும் நிலத்தினும் பொருந்த விழுந்தது. விழுந்த அவ்விரு பகுதிகள் முறையே மீனும் பறவையுமாகி ஒன்றை ஒன்று ஈர்த்தன. அதைக் கண்ட நக்கீரர் இரக்கம் மேலிட்டவராய், பறவையையும் மீனையும் பிரித்து விட்டார். உடனே அவை அவ்விடத்தே மாண்டன. உடனே அங்கொருபூதம் தோன்றி, "நக்கீர! முருகப் பெருமான் விரும்பி உறையும் இவ்விடத்தில் நீ கொலைப் பாதகம் செய்தனை" என்று கூறி, அவரைத் தூக்கிச் சென்று ஒரு குகையில் அடைத்துச் சென்றது.

குகையில் அடைப்புண்ட நக்கீரர் பேரறிவாளியாதலின், 'கந்தனைப் பாடாக் குறையால் நேர்ந்த விபத்து இது" என்பதை உணர்ந்தார்.

உடனே அவர் குமரனைக் குறித்த **திருமுருகாற்றுப்படை'** என்பதனைப் பாடினர். அவ்வளவில் குமரன் அவர் முன்னம் தோன்றி, "அன்ப! நீ வேண்டுவது யாது?" என நக்கீரர், "அண்ணலே. கைலை காணின் எனக்குற்ற குட்ட

நோய் நீங்கும் என நினது தந்தை செப்பினன்" என்றார். குமரன், "இக் குளத்தில் மூழ்குவையேல், கைலை காணலாம்;" எனக் கூறி மறைந்தனன்.

சேவலங் கொடியோன் செப்பியவாறு இப்பியப் புலமை வாய்ந்த நக்கீரர் அங்கிருந்த திருக்குளத்தில் மூழ்கினார்; தெய்வத் திருவருளாற் பொன் முகரி யாற்றினின்றும் வெளிப்பட்டார்; நாம் இருப்பது காளத்திப் பதி என்பதை உணர்ந்தார்; பின்னர்ப் புலவர் உடல் புளகிப்ப, காளத்தி மலையேறிக் குடுமித் தேவரைத் தரிசித்துப் பேரானந்த முற்றார்.

கைலை தாணச் சென்ற தமக்குக் காளத்திச் சேவை கிடைத்தமையின் அவ்விருதருளிக்ளும் ஒன்றேயாமென எண்ணி, நூறு செய்யுட்களால் க்கைலையையும் காளத்தியையும் துதித்தார். அந் நூறு செய்யுட்களும் அந்தாதித் தொடையால் இயற்றப்பட்டன. அந்நூல் **கைலை பாதி காளத்தி பாதித் திரு அந்தாதி** என வழங்குகிறது.

இங்ஙனம் பெருமானைப் பலவாறு போற்றிப் பாராட்டிய பெரியார்—நக்கீரர், காளத்தி வேடனான கண்ணப்பனைக் கரத்தால் அணைத்து காளையான் கழலடி நீழலிற் கலந்தருளினார்.

## நக்கீரர் இயற்றிய நூல்களும் பாக்களும்

நக்கீரர் இயற்றியனவாகச் சொல்லப்படும் நூல்கள் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, களவியலுரை, கைலைபாதி காளத்திபாதித்

திருவந்தாதி, திருவீங்கோய் மலை எழுபது, திழிவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, கண்ணப்ப தேவர் திருமறம், நக்கீரர் நாலடி நாற்பது என்பன. இவற்றுள் 'நக்கீரர் நாலடி நாற்பது' என்ற நூல் சிதைந்து போயிற்று.

இந்நூல்கள் அல்லாமல் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய சங்க நூல்களில் இவர் பாடியனவாக உள்ள பாக்கள் பல ஆகும்; அவற்றுள் ஒன்றில், 'கார்த்திகை விழா'ச் சிறப்பினை விளக்கிக் கூறியுள்ளார்: "கார்த்திகை மாதத்துக் கார்த்திகைக்குப் புதுவதாக மணம் புரிந்து கொண்ட மருமகளை அழைத்து வந்து, அவளால் முதலில் பாலை அடுப்பில் வைக்கச் செய்வதும், கார்நெற் கதிர்களை மண்படாமற் கொணர்ந்து அவலிடித்துப் பொரித்துப் படைப்பதும், அன்று வீடுகளிலும் தெருக்களிலும் விளக்குகளை வைத்துக் கொண்டாடுவதும் மரபு".

இங்ஙனமே இவர், ஒவ்வொரு பாவிலும் வரலாற்றுத் தொடர்புடைய செய்திகளையும் விழாச் செய்திகளையும் வருணனைகளையும் பிறவற்றையும் சிறப்பித்துப் போதல் மரபு. இவர் பாக்கள் பொருட் சிறப்பு மிக்கவை; எளிமையும் இனிமையும் வாய்ந்தவை; அவற்றை நீவிர் பன்முறைவும் படித்துப் பயன் பெறல் நன்றாகும். தமிழ்த்தாய் உங்கட்குத் தமிழிட்த்தே உள்ளக் கிளர்ச்சியை ஊட்டுவாளாக!